
பக்கங்கள்-16 31,ஜனவரி.2021 விலை-30.00




# தினப்புயல்

THINAPPUYAL
REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06




மலர்-01 Tel&Fax:- 0242227558, Hot line: 0711850885. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் -331

## நெருங்கும் ஐ.நா கூட்டத்தொடர்! சூடு பிடிக்கும் ஸ்ரீலங்கா விவகாரம்,

# சிங்கள மக்களை மயக்கத் தயாராகும் அரசு



## போர்க்குற்ற விசாரணைப் பிடிக்குள் இலங்கை, தப்புமா?



# கச்சதீவு பிரச்சினையும் இலங்கை அரசியலும்




-இது தமிழ் பேசும் மக்களின் இதயத்துடிப்பு-

# நெருங்கும் ஐ.நா கூட்டத்தொடர்! சூடு பிடிக்கும் இலங்கை விவகாரம், சிங்கள மக்களை மயக்கத் தயாராகும் அரசு

ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 46வதுகூட்டத்தொடர்நெருங்க நெருங்க இலங்கை விவகாரம் சூடு பிடிக்க தொடங்கியிருக்கிறது. இந்த கூட்டத்தொடரில் புதிய தீர்மானம் ஒன்றை முன்வைப்பதற்கு அனுசரனை நாடுகள்தயாராகிவருகின்றன. புதிய தீர்மானம் ஏற்கனவே நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை விட கடினமானதொன்றாக இருப்பது தவிர்க்க முடியாததாக மாறியுள்ள நிலையில் இலங்கை அரசாங்கம் அதற்கு இணை அனுசரணை வழங்குவதற்கு மறுப்பு தெரிவித்துள்ளது. இது எதிர்பார்க்கப்படாத விடயமல்ல. ஏனென்றால் இலங்கை அரசாங்கம் 30இன் கீழ் 01 தீர்மானம் மற்றும் அதன் தொடர்ச்சியாக நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களுக்கு வழங்கிய இணை அனுசரனையில் இருந்து ஏற்கனவே விலகிவிட்டது. இவ்வாறான நிலையில் புதிய தீர்மானம் அதனைவிட கடினமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படும் நிலையில் அரசாங்கம் அதற்கு ஆதரவளிக்கும் என்று எதிர்பார்க்கப்படுவது தான் முட்டாள்த்தனம்.

ஆனாலும் ஜெனீவாவில் உருவாகி வரும் சூழலை அரசாங்கம் எதிர்கொள்வதற்கான தயார்ப் படுத்தலை ஆரம்பித்திருக்கிறது. ஜெனீவாவில் எந்த அச்சுறுத்தலும் இல்லை என்றும் தீர்மானங்களை தமது நட்பு நாடுகளுடன் இணைந்து முறியடிக்கத் தயாராகி வருவதாகவும் முன்னர் கூறிவந்த அரசாங்கம், இப்பொழுது மெல்ல மெல்ல அழுத்தங்களை சந்திக்க ஆரம்பித்திருக்கிறது. அதனைவிட அரசாங்க தரப்பு மற்றும் அதனுடன் நெருங்கிய தரப்புக்கள் இக் கூட்டத்தொடர் குறித்து எச்சரிக்கை செய்யவும் ஆரம்பித்திருக்கின்றன.


குறிப்பாக ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் உறுப்பு நாடுகளுக்கு தமிழ் கட்சிகள், சிவில் அமைப்புகள் சார்பில் அனுப்பிவைக்கப்பட்ட கடிதம் அரசாங்கத்திற்கு புதிய சிக்கலை ஏற்படுத்தியிருக்கிறது. அந்த கடிதத்தில் இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள், போர்க்குற்றங்கள், இனப்படுகொலை, மனித குலத்திற்கு எதிரான குற்றங்களை விசாரிக்கும் சர்வதேச பொறிமுறையை உருவாக்கவேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளதுடன் இந்த விவகாரம் ஜெனீவாவிலிருந்து நியூயோர்க்குக்கு மாற்றப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

அதைவிட சிரியாவில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் தொடர்பான தகவல்கள், ஆதாரங்களை திரட்டி ஆவணப்படுத்துவதற்காக அமைக்கப்பட்டதைப்போன்று பக்கச்சார்பற்ற சுதந்திரமான விசாரணைப் பொறிமுறை ஒன்றை உருவாக்கி இலங்கையில் இடம்பெற்ற மீறல்களை ஆவணப்படுத்தவேண்டும் என்றும் இலங்கையை கண்காணிப்பதற்காக பொறிமுறை ஒன்றை உருவாக்க வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது. அதாவது பலகட்ட பொறிமுறைகளை உருவாக்குவதற்காக யோசனைகளையும், கோரிக்கைகளையும் இந்த பொது ஆவணத்தில் தமிழர் தரப்பு ஒன்றுபட்டு வலியுறுத்தியிருக்கிறது. இந்த ஆவணத்தில் உள்ளடக்கப்பட்ட விடயங்களை சர்வதேச சமூகம் கவனத்தில் எடுத்துக்கொள்ளுமா? என்பது நிச்சயமற்றதாக இருந்தாலும் முன்னரை விட கடினமான தீர்மானம் ஒன்றிக்கு அவர்கள் செல்வது இன்றைய நிலையில் தவிர்க்க முடியாதது.

இவ்வாறானநிலையில்கொழும்பில் பதற்றம் தொற்றிக்கொள்ள ஆரம்பித்திருக்கிறது. ஜெனீவாக்களும் இம்முறை சவாலானது என்பதை வெளிவிவகார அமைச்சின் செயலாளர் ரியல் அட்மிரல் ஜெயநாத் கொலம்பகே ஒப்புக்கொள்ளும் நிலைக்கு வந்திருக்கிறார். அதுபோலவே கலாநிதி தயான் ஜெயதிலகவும் இப்போதைய சூழல் அரசாங்கத்திற்கு கடினமாகவே இருக்கும் என்பதை கோடிட்டுக்காட்டியிருக்கிறார். போர் நடந்த காலத்தில் வெளிவிவகார அமைச்சராக இருந்த ரோகித போகல்லாகமவும் இம்முறை இலங்கைக்கு ஜெனீவா பெரும் சவாலாக இருக்கப்போகிறது என்று கூறியிருக்கிறார். இதுவெல்லாம் இம்முறை ஜெனீவா கூட்டத்தொடர் தொடர்பாக இலங்கையின் இராஜதந்திர மட்டத்தில் ஏற்படத் தொடங்கியிருக்கும் நடுக்கத்தை வெளிப்படுத்துகின்றன.

குறிப்பாக ரோகித போகொல்லாகம தமிழ்க் கட்சிகள் ஒன்றிணைந்து சமர்ப்பித்துள்ள ஆவணங்கள் குறித்து முன்னெச்சரிக்கை செய்திருக்கிறார். தமிழ்க் கட்சிகள் விடுத்துள்ள கோரிக்கைகளை இலகுவாக எடுத்துக் கொள்ளக் கூடாது என்றும் இந்த விவகாரம் குறித்து அரசாங்கம் தாமதம் இன்றி ஆராயவேண்டும் என்றும் அவர் கூறியிருப்பது கவனிக்கத்தக்கது. அதாவது ஜெனீவா கூட்டத்தொடரை அரசாங்கமும் சரி இராஜதந்திர மட்டங்களும் சரி மிகப்பெரிய பூதாகரமாக வெளிப்படுத்த தொடங்கியிருக்கின்றன. இது கடந்த காலங்களிலும் காணப்பட்ட சூழ்நிலை தான். ஒரு கட்டத்தில் ஜெனீவா களத்தை தூசி தான், தாண்டிவிடுவோம் என்று காண்பித்தவர்கள் தற்பொழுது அதனை மிகப்பெரிய விம்பமாக வெளிப்படுத்த ஆரம்பித்துள்ளதற்குப் பின்னால் உள்ள அரசியல் முக்கியமானது.

கொரோனா நெருக்கடி, பொருளாதார நெருக்கடிகள், மக்கள் மீது அதிகரித்து வரும் சுமைகள், இராணுவ ஆதிக்கம் அதிகரித்து வருவதால் ஏற்பட்டுவரும் அழுத்தங்கள் என அரசாங்கம் பல சவால்களை எதிர்கொள்ளத் தொடங்கியிருக்கிறது. இந்த அழுத்தங்கள், நெருக்கடிகள்



எதிலிருந்தும்இப்போதைக்குவிடுபட முடியாத நிலை அரசுக்கு ஏற்பட்டுள்ளது. இவ்வாறான நிலையில் மக்களை பாதுகாப்பான நிலையில் இருப்பதான உணர்வுக்குள் வைத்திருக்க முயன்ற அரசாங்கம் இப்போது எச்சரிக்கை நிலைக்குக் கொண்டு செல்ல ஆரம்பித்திருக்கிறது. இவ்வாறு உணர்ச்சியூட்டும் நிலைக்கு கொண்டு செல்வதே அரசாங்கத்திற்கு பாதுகாப்பானது. அந்த வழிமுறையைத்தான் அரசாங்கம் தற்பொழுது கையிலெடுத்துக்கொள்ள விரும்புவதாக தெரிகிறது. சிங்கள மக்கள் மத்தியில் ஜெனீவாவை பெரியதொரு அச்சுறுத்தலாக பூதமாக காட்டிக்கொள்வதன் மூலம் இந்த நெருக்கடியை வைத்து அரசியல் செய்வது அரசாங்கத்திற்கு இலகுவானது. அடுத்து வரும் மாதங்களில் அரசாங்கம் மாகாணசபை தேர்தலை நடத்தவேண்டிய நிலையில் இருப்பதால் அதற்கான பிரச்சாரத்திற்கும் இந்த விவகாரம் உதவியாக இருக்கும்.

அதைவிட ஜெனீவாவில் கொண்டுவரப்படவுள்ள தீர்மானத்தை தோற்கடிப்பதில் வெற்றி பெற்றாலும் தோல்வியடைந்தாலும் அதனை பிரமாண்டமான ஒன்றாக காட்டுவதும் அரசாங்கத்திற்கு முக்கியமானது. ஜெனீவாவில் தமக்கு தோல்வி ஏற்பட்டால் சர்வதேசத்தின் மிகப்பெரிய சதியாக இலங்கையின் இறைமை சுதந்திரத்தின் மீதான தலையீடாக அரசாங்கம் வெளிப்படுத்த முனையும். விழுந்தாலும் மீசையில் மண் ஒட்டவில்லையென்று காட்டுவதைவிட இதனை இலங்கையின் சுதந்திரத்திற்கு விடுக்கப்பட்ட சவாலாக காண்பிப்பதே அரசாங்கத்திற்கு கூடுதல் அனுகூலங்களைத் தரும். அதேநேரம் ஜெனீவாவில் இலங்கைக்கு வெற்றி கிட்டினால் அதனை விடுதலைப்புலிகளுக்கு எதிரான போரில் கிடைத்த வெற்றிக்கு பின்னர் கிடைத்துள்ள வெற்றியாக அதுவும் சர்வதேச வெற்றியாக காண்பித்து சிங்கள மக்களின் கண்களை கட்டிப்போட முடியும். ஆகவே எது நடந்தாலும் சிங்கள மக்களை தேசியவாத பிரச்சாரங்களால் மயக்குவதற்கு அரசாங்கம் தயாராகி வருகிறது. சர்வதேச அழுத்தங்களை சமாளிக்கும் நகர்வுகளைத்தாண்டி இலங்கை அரசாங்கம் இதனை அரசியலாக்குவதில் தான் கூடுதல் அக்கறை செலுத்துகிறது. ஏனென்றால் உள்நாட்டில் சரிந்துவரும் செல்வாக்கை தூக்கி நிறுத்துவதற்கு இது முக்கியமானது. சிங்கள பௌத்த தேசியவாத ஆதரவுபுலத்தில் ஏற்படும் சரிவில் இருந்து மீள்வது அரசாங்கத்திற்கு முக்கியம் என்பதால் வரும் நாட்களில் ஜெனீவாக்கள் பற்றிய பிரமாண்ட பூதம் வெளிப்படுத்தப்படுவதை அதிகரிப்பது தவிர்க்க முடியாத ஒன்றாகவே இருக்கப்போகிறது.

தொல்லியல் திணைக்களம் என்பதும் அரசியல் உபகரணங்களில் ஒன்று. எல்லா அரச திணைக்களங்களும் அரசினுடைய உபகரணங்கள் தான். ஒரு அரசின் கொள்கைகளை முன்னெடுப்பதே இந்த அரசின் உபகரணங்களின் வேலை. சிங்கள பௌத்த பெருந்தேசிய அரசின் கொள்கை என்பது சிங்கள பௌத்த விரிவாக்கம். இதைத்தான் 2009ஆம் ஆண்டு வரை அரசின் ஏனைய உபகரணங்களாகிய படைகள் செய்தன. 2009 இல் யுத்தம் முடிவிற்கு வந்ததன் பின் படையினரால் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கும் நிலங்களை ஒரே நாடு, ஒரே தேசம், ஒரே சட்டம் என்று கூறிக்கொண்டு அரசின் ஏனைய திணைக்களங்கள் செய்கின்றன. அரசின் ஏனைய திணைக்களங்கள் இந்த ஒடுக்குமுறைகளை ஏற்படுத்தும் உபகரணங்களே. இந்த அடிப்படையில் பார்த்தால் நாங்கள் நிறைய குழப்பத்தேவையில்லை. தெளிவாகத் தெரிகிறது ஒரு ஒடுக்கமுறைகளின் கருவிகளான இந்த உபகரணங்கள் ஒடுக்குமுறையைத் தான் முன்னெடுக்கும். சிங்கள பௌத்த மயமாக்கம். இந்த அடிப்படையில் தொல்லியல் திணைக்களம் எனப்படுவது அரசின் ஒடுக்கும் முறைமைகளில் ஒன்று. இலங்கைத்துறையில் தொல்லியல் முறை எனப்படுவது மதப்பன்மைத்துவத்திற்கு எதிரானது. அது தொடக்கத்திலிருந்தே சிங்கள பௌத்த மயமாக்கலை அடிப்படையான நோக்கமாக கொண்டது.

தொடரும்...

**இரணியன்**

தினப்புயல்
ஆசிரியர்பீடம்
இல:154 6வது ஒழுங்கை,
தேக்கவத்தை, வவுனியா.

## புதிய நெருக்கடிகளுடன் ஐ.நாவை சமாளிக்குமா இலங்கை

இலங்கையில் யுத்தம் நிறைவடைந்த கடந்த 2009ஆம் ஆண்டின் பின்னர் தான் இலங்கை என்கிற பெயர் ஐ.நா மனித உரிமை சபையில் கூட்டத்தொடர் நடக்கின்ற காலங்களில் எல்லாம் பேசப்படும் பெயராக மாறியிருக்கிறது. அந்த வகையில் இலங்கையில் கடந்த 30 வருடங்களாக நடைபெற்ற யுத்தத்திற்குப் பின்னரான காலப்பகுதிகளில் நடைபெறும் விடயங்கள் குறித்து அலசி ஆராய்ந்து ஐ.நா மனித உரிமைக் கூட்டத் தொடர்களில் இலங்கை மீதான பிரே ரணைகள் கொண்டுவரப்படுவதும், அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படுவதும் நடைபெற்று வருகின்றன. இலங்கையில் கடந்த காலங்களில் இடம்பெற்ற யுத்தக்குற்றங்கள், மனித உரிமையை மீறுகின்ற சம்பவங்கள் குறித்து பொறுப்புக்கூறவேண்டிய நிலையில் ஐ.நாவின் உறுப்பு நாடு என்கிற வகை யில் இலங்கை அரசு இருக்கிறது.

கடந்த ஐ.நா கூட்டத்தொடர்களில் இலங்கைக்கு எதிராக பிரேரணைகள் கொண்டுவரப்பட்டபோது இலங்கையைக் காப்பாற்றிய நாடுகள் இம்முறை எதிர்க்க வாய்ப்புள்ளதாக அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர். குறிப்பாக இஸ்லாமிய நாடுகள் இலங்கை மீதான நம்பிக்கையை இழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இதற்குப் பிரதான காரணம் உலகளவில் ஏற்பட்டுள்ள கொரோனா என்கிற வைரஸ் தான். அதாவது இலங்கையில் இவ் வைரசின் தாக்கத்தினால் மரணிக்கும் முஸ்லீம்களின் ஜனாசாக்கள் விடயத்தில் இலங்கையரசு மனிதாபி மான ரீதியாக நடந்துகொள்ளவில்லை, இது ஒரு மனித உரிமை மீறல் என்று பரவலாக அனைத்து சமூகத்தினராலும் குற்றஞ்சாட்டப்படுவதனை அவதானிக்க முடிகிறது.

எனினும் எதிர்வரும் ஐ.நா கூட்டத்தொடரில் இலங்கையின் நிலைப்பாடு தொடர்பில் வெளி விவகார அமைச்சு ஏற்கனவே அறிவித்துவிட்டது. சர்வதேச விசாரணை என்கிற பேச்சுக்கே இடமில்லை, உள்ளக விசாரணை தான் இடம்பெறும் என்கிறது. படையினரைக் குற்றஞ்சாட்டுவதில் இலங்கை அரசுக்கு உடன்பாடில்லை. ஆட்சியாளர்களைக் காட்டிக்கொடுக்க சிங்களப் பேரினவாதம் தயாராக இல்லை. ஈழப்போரின் இறுதிக்கட்டத்தில் நடந்த போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் குறித்து அனைத்து ஆதாரங்களும் உள்ளூர் மற்றும் சர்வதேச ரீதியாக நிபுணர்களால் திரட்டப்பட்டு ஐ.நாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன், அங்கு சனல்-4 நிறுவனத்தினால் காட்சிப்படுத்தப்பட்டும் இருக்கின்றது. ஈழப்போரின் இறுதிக்கட்டத்தில் இனப்படு கொலையினைச் செய்தவர்களே மீண்டும் ஆட்சிபீடமேறியிருக்கும் இந்நிலையில், எதிர்வரும் ஐ.நா கூட்டத்தொடர்களில் பதில் கூறவேண்டிய நிலையில் இருக்கும் இலங்கையரசு செய்வதறியாமல் தடுமாறு கிறது.

தமிழ் மக்கள் உள்ளூர் பொறிமுறையை நம்ப முடியாது சர்வதேச ரீதியாக நீதியான விசாரணை தான் வேண்டும் என அழுத்தமாக கூறிவரும் நிலையில், இம்முறை ஜெனீவாவில் இலங்கை யரசு கொரோனா பரவலையும் கட்டுப்படுத்த இயலாமல், பொருளாதார நெருக்கடியையும் சுமந்துகொண்டு, சர்வதேச நெருக்கடி ஒன்றினையும் இனி வரும் காலங்களில் தொடர்ச்சியாக சந்திக்கவிருக்கிறது என்பது மட்டும் உறுதி. ஏனெனில் சர்வதேச ரீதியாக இடம்பெற்றுள்ள சில மாற்றங்கள் தமிழ் மக்களுக்கு சாதகமாக அமைந்துள்ளதை அரசியல் அவதானிகள் தொடர்ந்தும் சுட்டிக்காட்டியே வருகின்றனர். தமிழ் மக்கள் விரும்புவதெல்லாம் இழைக்கப்பட்ட குற்றங்களுக்கான நீதியான சர்வதேச விசாரணையையேயாகும்.

# உலக வரலாற்றில் குறுஞ்சமர்

134



இங்கே கட்டளையகத்தைக் காவல் காக்கின்ற படைகளோடு சமரிட வேண்டியுள்ளதுடன், சிறப்புப் படைப்பிரிவுகளோடும் (தொடர்பு, வேவு - ஆகாய வேவும் உள்ளடங்கலாக - போன்ற பலவற்றுடனும்) சமரிட வேண்டியுள்ளது. பாசிசப் படைகளால் ஆக்கிர மிக்கப்பட்டுள்ள சகல மக்கள் வாழ்விடங்களும் ஏறக்குறைய தற்காப்பு நடவடிக்கைக்குத் தயார்ப் படுத்தப்பட்டிருக்கின்றன. மக்கள் வாழ்விடத்தின் கரையோரப் பகுதிகள், அங்கு செல்வதற்கான பாதைகள் போன்ற இடங்களில் வெவ்வேறு வகையான தடைகளும் காப்பகழிகளும் சூட்டு நிலைகளும் உருவாக்கப்பட்டிருக்கும். கட்டடங்களுக்குள்ளிருந்து வீதி களுக்கும் சதுக்கங்களுக்கும் சுடக்கூடியவாறு தனியான கட்டுமானங்களும் தற்காப்பிற்காகச் சேர்த்துக்கொள்ளப்பட்டிருக்கும்.

இதுதவிர மக்கள் வாழ்விடம் கெரில்லாக்களின் அல்லது சோவியத் வான்குடை வீரர்களின் கைகளில் விழும் சமயத்தில் அயல் பிரதேசத்திலிருந்து ஆட்டிலறி இயந்திரச் சுடுகலன் போன்றவற்றினால் அவ் வாழ்விடத்தைத் தாக்குவதற்கு எதிரி முன்னரேயே தயார்ப் படுத்தியுமிருப்பான். பாசிஸ்டுக்களின் முகாம்கள் பெரியளவில் கம்பித் தொடர்புகள் அல்லது வானொலித் தொடர்புகளை அயலிலுள்ள முகாம்களுடன் கொண்டிருக்கும்.

இதனால் ஒப்பீட்டளவில் வேக மாக உதவிப்படைகளை அவற்றால் பெற்றுக்கொள்ள முடிகின்றது. திகைப்புத் தாக்குதலையும் முன்முயற்சியுடைய செயற்பாடு களையும் தம்மகத்தே பூரணமாகக் கொண்டிருப்பதற்காக மேற் குறித்தவை யாவும் மக்கள் வாழ்விடத்திலுள்ள எதிரி மீது தாக்குதலைத் தொடுப்ப தற்குக் குறித்த கவனத்துடன் தயார்ப்படுத்தலை மேற்கொள்ள கெரில்லாக்களை நிர்ப்பந் திக்கின்றன. தாக்குதல் இலக்குகளை நன்றாக ஆராய். முடிந்தவரை ஒவ்வொரு நாளும் வேவுபார். மக்கள் வாழ்விடத்தின் அமைப்புத் திட்டம், அங்குள்ள வீதிகள், சதுக்கங்கள், தனியான கட்டடங்கள் போன்றவற்றைத் துல்லியமாகத் தெரிந்திருப்பது அவசியமாகும். இங்கே ஒவ்வொரு கெரில்லா வீரனும் நன்றாக நிலையறியத் தெரிந்திருக்க வேண்டும். இந்த வாழ்விடத்தைப் போன்ற திட்ட வரைபடத்தை உருவாக்கு. தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட வேண்டிய சகல எதிரி இலக்குகளையும் அதில் குறித்துக்கொள். முன்னரேயே இதனைத் தனிப்பட்ட முறையில் பார்வையிடுவது சிறந்தது.

கல்லாலான கட்டடங்களையும் மரத்தினாலான கட்டடங்களையும் அவசியம் தெரிந்து வைத்திருப்பதுடன் எவ்வகையான பணிகளைச் செய்பவர்கள் அங்கே இருக்கின்றார்கள் என்பதையும் தெரிந்திருக்க வேண்டும். வெவ்வேறான இலக்குகளுக் கிடையிலான குறுந்தூரப் போக்குவரத்துப் பாதை களையும் ஆய்வறிந்துகொள். வாழ்விடத்தின் வெவ்வேறு பகுதிகளிலுள்ள பாசிஸ்டுக்களின் முகாம்களது அமைவிடங்களையும் வேவுபார். முகாமின் மொத்த ஆளணி எண்ணிக்கை எவ்வளவு, தனியான ஒவ்வொரு இலக்குகளையும் எவ்வாறான படைகள் காவல் காக்கின்றன, எவ்வகையான ஆயுதங்களைப் பாசிஸ்டுக்கள் தரித்துள்ளார்கள், காவற்கடமையாளனும் ரோந்தும் பாதுகாவலனும் மாற்றப்படுகின்ற ஒழுங்கு போன்றன எந்தக் கட்டடங்களில் அதிகாரிகள், கட்டளையகப் பணியாளர்கள், பாசிச நிர்வாகசபை உறுப்பினர்கள் போன்றோர் வசிக்கின்றனர் என்பதையும் அறிந்துகொள்.

இந்த மக்கள் வாழ்விடத்தில் பாசிஸ்டுக்களால் மேற்கொள்ளப் படுகின்ற தற்காப்பின் தன்மையைக் கணித்துக்கொள். தடைகளினதும் பாதுகாப்பரண்களினதும் அமைப்பு, சூட்டு நிலைகள் அமைந்துள்ள இடங்கள், ஒவ்வொரு கட்டடங் களதும் தற்காப்புத் தயார்ப்படுத்தல் (சாளரங்களில் பாதுகாப்புக் கருவிகள் பொருத்தப்பட்டுள்ளனவா, எதிர்த்து நிற்பதற்காகப் பாசிஸ்டுக்கள் தங்கக்கூடிய கட்டடக்கீழ் நில வறைகள், பதுங்குகுழிகள், நில வறைகள் போன்றன இருக்கின்றனவா) போன்றனவாகும். வீதிகளிலும் சதுக்கங்களிலும் பதுங்குகுழிகள், தடையரண்கள் போன்றன இருக்கின்றனவா என்பதனையும் பரிசோதித்துக்கொள். மக்கள் வாழ்விடத்திற்குச் செல்கின்ற பாதைகளை மிகக் கவனமாக ஆராய்ந்து கொள். எங்கே குறைந்த இழப்புடன் மிக வேகமாக எதிரியின் இலக்கை அடைவதற்காக உடைத்துச் செல்லலாம் என்பதனையும் அறிந்துகொள்.

இதற்காகப் பின்வருவனவற்றைத் தெரிந்திரு. எந்தெந்தப் பகுதிகள் கூடுதலானளவில் செயற்கைத் தடைகளைக் கொண்டிருக்கின்றன, முதலாவதாக அழிக்கப்பட வேண்டிய எந்தெந்தச் சூட்டுநிலைகளிலிருந்து பாதைகளுக்குச் சுடப்படுகின்றன. எங்கே கண்ணி வயல்கள் இருக்கின்றன, அவற்றை மேவிச் செல்லலாமா போன்றனவே அவையாகும். அந்த வாழ்விடத்திற்கு அருகாக ஆறு ஓடிக்கொண்டிருந்தால் அல்லது சதுப்பு நிலம் காணப்பட்டால் மறைப்பான முறையில் சந்தடியின்றி அதனைக் கடந்து தாக்குதல் இலக்கைச் சென்றடையும் சாத்தியத்தைக் கணித்துக்கொள்.

தொடர்ச்சியாக வேவுபார். முன்னர் பெறப்பட்ட தகவல்கள் யாவற்றையும் சீர்ப்படுத்திச் சரிபார். வேவுக்காக சோவியத் தேசபக்தர்களது உதவியை நாடு. அத்துடன் அந்த மக்கள் வாழ்விடத்தில் வசிக்கின்ற கெரில்லாக்களின் உறவினர்களினதும் நெருக்கமான அறிமுகமுள்ளவர்களினதும் உதவி யையும் பெற்றுக்கொள். அவர்களுடன் தொடர்ச்சியான தொடர்பைப் பேணிக்கொள். பெறப்பட முடியாதபல தகவல்களைக் கைது செய்யப்பட்ட பாசிஸ்டுக்களது விசாரணைகள் உனக்குத் தந்துதவும்.


மக்கள் வாழ்விடத்திலுள்ள எதிரிமீது தாக்குதல்தொடுத்துவெல்வதற்கான பிரதானநிபந்தனையைஎப்பொழுதும் நினைவிற்கொள் - திகைப்புத் தாக்குதலும் முன்முயற்சியான செயற்பாடுகளுமாகும். எதிரிக்குத் தெரியாதவாறு சந்தடியின்றி அவனை நெருங்கு, ஆனால் அவனை நெருங்கியதும் ஆவேசமாகவும் தீர்க்கமாகவும் செயற்படு. எதிரி குறைந்தளவில் ஆபத்தை எதிர்பார்க்கின்ற இடத்தில் அவன் மீது தாக்குதல்களைத் தொடு. அவனைத் திகைப்பு நிலைக்குள் வைத்திருக்க முயற்சிசெய். தாக்குதலுக்கான மிகச் சிறந்த நேரம் ,ராப்பொழுதாகும். மோசமான காலநிலைப் பொழுதுகளிலும் (கடுமையான புகார் அல்லது பனிப்பொழிவு) தாக்குதலை மேற்கொள்ளலாம். இரவுப்பொழுது எல்லாவற்றிலும் சிறந்ததாகும். ஏனெனில் இந்நேரத்தில் பூரண திகைப்புத் தாக்குதலை இலகுவாக நடைமுறைப்படுத்தலாம்

ஆனால் இரவு நேரத்தில் செயற்படுவதற்குக் கவனமாகத் தயார்ப்படுத்தப்பட்டிருக்க வேண்டும். ஒவ்வொரு கெரில்லாவும் தனது பணியைத் துல்லியமாக அறிந்திருக்க வேண்டும். எக்குழுவின் அணியில் அவன் செயற்படுகின்றான், எந்தெந்த இலக்குகள் எவ்வகையில் அழிக்கப்படுகின்றன போன்றனவாகும். ஒரு குழுவைச் சேர்ந்த கெரில்லாக்கள் தங்கள் குழுவிலுள்ள ஒவ்வொருவரதும் முகங்களை நன்கு தெரிந்தவர்களாக இருக்க வேண்டும். இருளில் இனங்கண்டு கொள்வதற்காகத் தலையணிகளை அணியலாம் அல்லது வெண்ணிறத்தில் இனந்தெரியக் கூடிய கைப்பட்டிகளை அணியலாம்.

தொடர்வான்...

**நெற்றிப்பொறியன்**

# போர்க்குற்ற விசாரணை பிடிக்குள் இலங்கை, தப்புமா?





மறவன்

இன்றைய அரசியல் சூழ்நிலையில் இலங்கை அரசானது தமிழினத்தின் மீது மேற்கொண்ட இனப்படுகொலைகளை மூடி மறைக்கின்ற ஒரு செயல் வடிவத்தினையே தற்பொழுது கொண்டுள்ளது. இலங்கையில் போர் முடிவடைந்து 10 ஆண்டுகளை கடந்துள்ள நிலையில் இன்னமும் தமிழினத்திற்கு இழைக்கப்பட்ட அநீதிகள் தொடர்பான விசாரணைகள் முன்னெடுக்கப்படவில்லை. இதற்கான காரணங்களில் ஒன்றாக கடந்த காலங்களில் இலங்கை அரசாங்கத்திற்கு வழங்கப்பட்ட கால அவகாசம் அமைகிறது. இந்த காலக்கெடுவினூடாக இலங்கை அரசாங்கம் தன்னை சரியானதொருநிலைப்பாட்டை எடுப்பதற்கு ஒத்தாசைகளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் இணைந்து வழங்கியிருந்தது எனலாம்.

இதனைப் பயன்படுத்திய இலங்கை அரசானது, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை வீழ்த்தி கோட்டபாய ராஜபக்ச அவர்கள் சிறிலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியையும் பிளவடைய செய்து இந்த நாட்டின் ஜனாதிபதியானார். இந்த சூழ்நிலையில் தமிழ் மக்களுக்கான அரசியல் ரீதியிலான தீர்வினை பெற்றுக்கொடுக்கக்கூடிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது மாறி மாறி வந்த அரசாங்கங்களுடன் பேச்சு வார்த்தைகளை நடத்தி வந்தபோதிலும் இனப்படுகொலைகள் என்ற விடயத்திலும் போர்க்குற்றம் என்ற விடயத்திலும் அரசாங்கம் எந்தவொரு விடயத்தையும் விட்டுக்கொடுப்பதாக இல்லை. மாறாக இனப்படுகொலைகள் தொடர்பில் சர்வதேச கூட்டத் தொடர்களில் தமது கருத்துக்களை முன்வைப்பவர்கள் மீது அரசாங்கம் நடவடிக்கை எடுத்து அவர்களையே காணாமல் போகச் செய்யும் நடவடிக்கைகளையே கடந்த காலங்களில் மேற்கொண்டது. தற்பொழுதும் மேற்கொண்டு வருகிறது.

நிலைமைகள் இவ்வாறிருக்க இதனை எவ்வாறான முறையில் கட்டுப்படுத்தலாம் அல்லது முடிவுக்குக் கொண்டுவரலாம் என்ற நிலைப்பாட்டை தமிழ்க் கட்சிகள் மேற்கொள்ளத் தவறிவிட்டார்கள். தமிழ் மக்களுடையபாதுகாப்பானதுதொடர்ந்தும் உறுதிப்படுத்தப்பட வேண்டுமாக இருந்தால் அவர்களுக்கான காணி மற்றும் பொலிஸ் அதிகாரம், கடத்தப்பட்டு காணாமலாக்கப்பட்டவர்களுக்கான தீர்வு, தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை போன்றவற்றிற்கான தீர்வினை இந்த தமிழ் அரசியல் தரப்புக்கள் செய்துகொடுக்க வேண்டும். இவர்கள் தற்பொழுதும் காலத்தை இழுத்தடித்துக் கொண்டிருக்கிறார்களே தவிர தமிழ் மக்களுக்கான தீர்வை பெற்றுக்கொடுப்பதாக இல்லை. அதுபோன்று அரசாங்கமும் தமிழ் மக்களுக்கான தீர்வு திட்டத்தை இழுத்தடித்துக் கொண்டே இருக்கின்றது. மன்னாரின் முன்னாள் மறை மாவட்ட ஆயர் இராயப்பு ஜோசப் ஒரு இலட்சத்து 40 ஆயிரம் பேர் ஈழப்போரின் இறுதிக் கட்டத்தில் கொல்லப்பட்டதாக அறிவித்திருந்தார். இவ்வாறு அறிவித்திருந்தமையினாலேயே மன்னார் தள்ளாடி முகாமில் வைத்து அவருக்க தேனீருடன் மருந்து ஒன்றைக் கொடுத்தார்கள் என்று அப்போது செய்திகள் கூறின. எது எவ்வாறிருப்பினும் முன்னாள் மன்னார் மறை மாவட்ட ஆயர் தனது கருத்துக்களை சொல்லத் தயங்கவில்லை. போர் உச்சக்கட்டத்தில் இடம்பெற்றுக்கொண்டிருந்த போதும் அதன் பின்னரும் சரணடைந்த விடுதலைப்புலிகளின் நூற்றுக்கும் மேற்பட்ட தளபதிகள், போராளிகள் வெள்ளைக்கொடியுடன் வந்தார்கள். வெள்ளைக்கொடியுடன் சரணடைந்த இவர்களும் சுட்டுக்கொல்லப்பட்டதற்கான ஆதாரங்களும் இருக்கின்றன.

இவை பிரிட்டனில் இயங்கி வருகின்ற சனல்-4 தொலைக்காட்சியில் ஒளிபரப்பு செய்யப்பட்டன. அதை விடவும் இலங்கையில் இருந்து ஆதாரபூர்வமான பல்வேறு ஆவணங்கள் நூற்றுக்கு மேற்பட்ட மனித உரிமை அமைப்புக்களிடம் வழங்கப்பட்டும் இருந்தது. ஆனாலும் இவை அனைத்தும் ஒரு போர்த்தளத்தில் இடம்பெறுகின்றவை என்றும் தாம் பயங்கரவாதிகளுடனேயே போரிட்டு தமிழ் மக்களை மீட்டெடுத்தோம் என்றும் அரசாங்கம் கூறிக்கொண்டிருக்கும் அதேவேளை, தாமும் சர்வதேசத்திடம் ஆவணங்களைச் சமர்ப்பித்திருக்கிறது. தற்பொழுது இருக்கக்கூடிய தமிழ் ஆயுதக் கட்சிகளில் ஒரு சில தமிழினத்திற்கு விரோதமான செயற்பாடுகளில் களமிறங்கியுள்ளார்கள்.

மறைமுகமாக அரசாங்கத்துடன் இணைந்து ஈழப்போரின் இறுதிக் கட்டத்தில் காட்டிக்கொடுப்புக்களை மேற்கொண்ட ஒட்டுக்குழுக்கள் இதன் பின்னணியில் செயற்பட்டு வருகிறார்கள். இதில் குறிப்பாக தற்போதைய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, பிள்ளையான், கருணா இன்னும் பல அமைப்புக்களும் கட்சிகளும் விடுதலைப்புலிகள் தான் குற்றம் இழைத்தார்கள் என்று கூறி வருகின்றனர். 1 இலட்சத்து 40 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டிருக்கிறார்கள், கடத்தப்பட்டு காணாமலாக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற ஒரு விடயமிருக்க, சரணடைந்த ஊடகவியலாளரான இசைப்பிரியா, பிரபாகரனின் மகன் பாலச்சந்திரன் உட்பட 400க்கும் மேற்பட்ட போராளிகள் அதுமட்டுமல்லாமல் 01 இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் என்னவானார்கள் என்பது இதுவரையிலும் கண்டறியப்படவில்லை. இது இவ்வாறிருக்க ஈழப்போரின் இறுதிக்கட்டத்தில் இடம்பெற்ற போர்க்குற்றங்களை விசாரணை செய்வதற்காக ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ச அவர்களால் குழு ஒன்று நியமிக்கப்பட்டிருக்கிறது. அந்த குழுவினூடாக தமிழ் மக்களுக்கு தீர்வு எட்டப்படும் என்பது பகற்கனவு. ஆனால் சர்வதேச ரீதியாக இந்த நாட்டில் இனப்படுகொலைகள் இடம்பெற்றது என்பதற்கான அனைத்து ஆதாரங்களும் இருக்கின்றன. ஒரு இனமாகவோ ஒரு குழுவாகவோ அழிக்கப்பட்டால் அது இனப்படுகொலை. இவற்றிலே கட்டாய மதத்திணிப்பு, கட்டாய கருத்தடை, விசவாயுக்களை பயன்படுத்தி கொலை செய்தல், ஒரு இனத்தின் மீதான பாலியல் துஸ்பிரயோகம் மற்றும் திட்டமிட்டு அழித்தல் (Deliberate destruction) போன்ற விடயங்களும் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளது. இன்றைய கால சூழ்நிலையில் தமிழ் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தி இருக்கக்கூடிய தமிழ்க் கட்சிகள் இந்த இனப்படுகொலை விவகாரத்தில் ஒன்றிணைந்தால் மட்டுமே பல விடயங்களை சாதிக்க முடியும். அரசாங்கம் கட்சிகளுக்கிடையே குழப்பங்களை உருவாக்குகின்ற அரசியலையும் நாட்டில் குழப்பங்களை உருவாக்கும் அரசியலையும் அது உருவாக்கும்.

அவர்களுடைய நோக்கங்கள் எல்லாம் தமிழ் மக்களுக்கான தீர்வுத் திட்டம் என்பது சாத்தியமற்றதொன்று மற்றும் வடகிழக்கிணைந்த தமிழர் தாயகம் வழங்கப்படக்கூடாது என்பதிலும் கரிசனையாக செயற்படுகிறார்கள். இதனை அரசாங்கத்துடன் ஒட்டுக் குழுக்களாக சேர்ந்து செயற்படும் தமிழ்த் தரப்பு தமது கண்மூடித்தனமான செயற்பாடுகளை செய்து வருகிறது. இரகசியமான முறையில் காய்நகர்த்தல்களை மேற்கொண்டால் மாத்திரமே தமிழ் மக்களுக்கான நீதியை சர்வதேசத்திடமிருந்து நாம் பெற்றுக்கொள்ள முடியும். செயற்படுத்துகின்ற நடவடிக்கைகளை ஒருபோதும் நாம் அரசாங்கத்திற்கு தெரிவிக்கக்கூடாது. உள் ஒன்று புறம் ஒன்று வைத்தே நாம் செயற்பட வேண்டும். நீதி - நேர்மை என்று பார்த்து அரசாங்கத்துடன் செயற்பட்டால் அவர்கள் ஒருபோதும் அதை எமக்கு விட்டுத்தரமாட்டார்கள். அதிகாரபூர்வமான சில நடவடிக்கைகளையும் நாம் மேற்கொள்ள வேண்டும். அவ்வாறு மேற்கொள்வதனூடாகவே சர்வதேச ரீதியிலான விசாரணைகளுக்கு முகம்கொடுத்து அதனை வெற்றிகரமான முறையில் செயற்படுத்த முடியும். இதுவரை காலமும் இடம்பெற்ற ஜெனிவா அமர்வுகளில் குறிப்பிட்ட ஒரு சில விடயங்களை மாத்திரமே தமிழ் தரப்பு பேசி வந்துள்ளது. இவை கூடுதலாக கைகலப்புக்களில் முடிந்திருக்கின்றது.

ஆகவே தமிழ் மக்களுக்கான தீர்வுத் திட்டம் என்பதனை அரசுக்கு எதிரான இராஜதந்திரப் போர் முறைகளை கையாளுவதனூடாகவே அது மட்டுமன்றி ஆதாரங்களைத் திரட்டி சர்வதேசத்திற்கு தகவல்களை வழங்குவதனூடாக தமிழ் மக்களுக்கான தீர்வுத் திட்டத்தினை பெற்றுக்கொள்ள முடியும். தமிழ் மக்களுடைய பிரச்சினைகளை வைத்துக்கொண்டு தென்னிலங்கையிலும், வடக்குக் கிழக்கிலும் போலி அரசியல் செயற்பாடுகளை நகர்த்திக் கொண்டிருக்கிறார்கள்.

முன்னாள் மனித உரிமை ஆணையாளர் நாயகம் நவநீதம்பிள்ளை, யஸ்மின் சூகா, யசூசி அகாசி போன்றவர்களால் கூட தமிழ் மக்களுக்கான தீர்வை பெற்றுக்கொடுக்க முடியாமல் போனது. நோர்வேயின் எரிக்சொல்ஹெய்ம் வருகை விடுதலைப் போராட்டத்திற்கு பாரிய பின்னடைவையே ஏற்படுத்தியது. நோர்வே சமாதானத்திற்காக தலையிட்ட எந்த நாடுகளும் உருப்பட்ட வரலாறு இல்லை. இருந்த போதிலும் சமத்துவமான நிலைமைகளை உருவாக்க நோர்வே பல முயற்சிகளை எடுத்தது. ஆனால் அத்தனை முயற்சிகளும் தோல்வியிலே முடிவடைந்தன. தனது வேலையை கச்சிதமாக முடித்துக்கொண்டு நோர்வே வெளியேறியது என்பது தான் இன்றைய வரலாறு.

ஆகவே 30 ஆண்டு கால ஆயுதப் போராட்ட யுத்தத்திற்கு முடிவுகட்ட வேண்டுமாக இருந்தால் அரசாங்கத்தை மீண்டும் அடிபணிய வைக்கவேண்டும். அது ஆயுதப்போராட்டமாகவோ அல்லது அகிம்சைப் போராட்டமாகவோ இருக்கலாம். சர்வதேச நாடுகளின் உதவிகளோடு கூட இருக்கலாம். பெரும்பாலும் வீட்டோ அதிகாரம் கொண்ட நாடுகளுடன் எமது செயற்பாடுகளை முன்னெடுத்தால் தமிழ் மக்களுக்கான தீர்வைப் பெற்றுக்கொள்ளலாம். போர்க்குற்ற விசாரணையில் இருந்து அரசாங்கத்தை தப்பவைத்தால் அல்லது தென்னிலங்கை சிங்களவர்கள் அமைதியாகவும் சௌபாக்கியமாகவும் வாழ்வார்களாக இருந்தால் எம் தமிழினம் மீண்டும் ஒரு அடிமை நிலைக்கு செல்லவேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்படும். அதற்கு முன்னர் இரகசியமான முறைகளில் போர்க்குற்ற விசாரணைகளை சர்வதேசத்தினூடாக முன்னெடுக்கத் தேவையான சகல ஒத்துழைப்பையும் தமிழ் அரசியல் கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைந்து மேற்கொள்ள வேண்டும் என்பதே இந்த கட்டுரையின் நோக்கமாகும்.

# தமிழ்க் கட்சிகள் ஜெனீவாவுக்கு அனுப்பிய ஒரு பொது ஆவணம்!



2018ஆம் ஆண்டு உள்ளூராட்சிமன்றத் தேர்தலை முன்னிட்டு யாழ்.திருமறைக் கலாமன்றத்தில் தமிழ் சிவில் சமூக அமையத்தால் ஒரு சந்திப்பு ஒழுங்கு செய்யப்பட்டது. இச்சந்திப்பின்போது, மாற்று அணிகளைச் சேர்ந்த கட்சிகள் ஐக்கியப்பட்டால் வாக்குச் சிதறலைத் தடுக்கலாம் என்று பொதுவாகக் கருத்துத் தெரிவிக்கப்பட்டது. எனினும் அப்படியொரு இணைப்பு அப்போதைக்குச் சாத்தியமில்லை என்றும் சுட்டிக்காட்டப்பட்டது. சந்திப்பின் முடிவில் யாழ்.பல்கலைக்கழக புலமை சாரா ஊழியர் சங்கத்தின் பிரதிநிதி ஒருவர் பின்வருமாறு சொன்னார். 'இவர்களை இப்போதைக்கு ஒற்றுமைப்படுத்த முடியாது. ஒற்றுமைப்படுத்த வெளிக்கிட்டால் அவர்கள் எங்களைத்தான் விரோதமாகப் பார்ப்பார்கள். எனவே, அவர்களை அவர்களின் போக்கில் விடுவோம். அவர்கள் சிதறிப்போய் தேர்தலை எதிர்கொள்ளட்டும். அதில் வெல்பவர் வெல்லட்டும் தோற்பவர் தோற்கட்டும். அதற்குப் பின்னர் அவர்கள் ஏதோ ஒரு வழிக்கு வருவார்கள். அப்பொழுது அவர்களை ஐக்கியப்படுத்தலாம்' என்று. அவர் அவ்வாறு கூறி இரண்டு ஆண்டுகளின் பின்னரே ஒரு தற்காலிக ஐக்கியத்தை ஏற்படுத்த முடிந்திருக்கிறது. கடந்த இரண்டு ஆண்டு காலப்பகுதிக்குள் மூன்று தேர்தல்கள் நடந்துவிட்டன. இதில் கடைசியாக நடந்த பொதுத் தேர்தலின் போது தமிழ் வாக்குகள் முன்னெப்பொழுதையும் விட அதிகரித்த அளவில் சிதறின. இதன் விளைவாக கூட்டமைப்பு அதன் ஏகபோகத்தை இழந்தது. ஆனால், கூட்டமைப்பு இழந்த ஆறு ஆசனங்களையும் மாற்று அணி பெறவில்லை. மாற்று அணி மூன்று ஆசனங்களையே பெற்றது. இவ்வாறு கடந்த பொதுத் தேர்தலின்போது வாக்களிப்புக் கோலம் மாறியதன் விளைவாக உருவாகிய ஒரு புதிய சூழலே கடந்த வாரம் தமிழ் தேசிய நிலைப்பாட்டைக் கொண்ட மூன்று கட்சிகளுக்கிடையில் ஒரு விவகார மையக்கூட்டை உருவாக்கக்கூடிய நிலைகளைத் தோற்றுவித்தது. கொள்கைக்கூட்டு உடனடிக்கு சாத்தியம் இல்லை. அப்படி ஒரு கொள்கைக் கூட்டு உருவாகும் வரையிலும் தமிழ் தேசியக் கட்சிகள் சிதறிக் கிடந்தால் அது தென்னிலங்கை மையக் கட்சிகளுக்கும் அவற்றின் சேவகர்களுக்குமே வாய்ப்பாகி விடும். எனவே, ஒரு கொள்கைக் கூட்டு ஏற்படும் வரையிலும் காத்துக் கொண்டிருக்காமல் தற்காலிகமாக சமயோசிதமாக கட்சிகளைப் பிரச்சினைகளை மையமாகக் கொண்டு உருவாக்கப்படும் தற்காலிக கூட்டுக்குள் கட்டிப்போட வேண்டும். இதன் மூலம் தனியோட்டம் ஓடக்கூடிய கட்சிகளையும் நாடாளுமன்ற உறுப்பினர்களையும் கட்டுப்படுத்த வேண்டிய ஒரு தேவை உண்டு.

இந்த அடிப்படையில் தான் மூன்று வாரங்களுக்கு மேலாக மூன்று கட்சிகளையும் ஜெனிவாவை நோக்கி ஒருங்கிணைக்கும் நோக்கத்தோடு மூன்று சந்திப்புகள் ஒழுங்குசெய்யப்பட்டன. தமிழ் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட இச்சந்திப்புகளில் முதலாவது கிளிநொச்சியில் நடந்தது. மத குருக்கள் உட்பட குடிமக்கள், சமூகப் பிரதிநிதிகள் கலந்துகொண்ட இச்சந்திப்பில் தமிழ் தேசிய மக்கள் முன்னணி கலந்துகொள்ளவில்லை. விக்னேஸ்வரனின் பிரதிநிதியாக அருந்தவபாலன் பங்குபற்றினார். கூட்டமைப்பின் சார்பாக சுமந்திரன் வந்திருந்தார். சிவாஜிலிங்கமும் ஆனந்தியும் வந்திருந்தார்கள். இக்கூட்டத்தில் பேசிய சுமந்திரன் பெருமளவுக்கு ஜெனிவாவோடு அதாவது, ஐ.நா. மனித உரிமைகள் பேரவையோடு ஏதோ ஒரு விகிதத்திலாவது எங்கேஜ் பண்ணவேண்டும் என்ற தொனிப்படப் பேசினார். ஜெனிவாவுக்கு வெளியே போவதில் இருக்கக்கூடிய சவால்களையும் சுட்டிக்காட்டிக் கதைத்தார். சந்திப்பில் கலந்துகொண்ட சிவாஜிலிங்கம் தாம் அங்கம் வகிக்கும் விக்னேஸ்வரனின் கூட்டணி ஜெனிவாவுக்கு அனுப்புவதற்கு என்று தயாரித்து வைத்திருக்கும் ஓர் ஆவணத்தை முன்வைத்துப் பேசினார். அதில் அவர் ஜெனிவாவை முழுவதுமாகக் கைவிடாமல் அதில் ஏதோ ஒரு விகிதமளவுக்கு எங்கேஜ் பண்ணிக்கொண்டு ஜெனிவாவைக் கடந்துபோக வேண்டும் என்று சொன்னார். அவருடைய வார்த்தைகளில் சொன்னால் 'யாரையாவது உதைவது என்றால் ஒரு காலை நிலத்தில் ஊன்ற வேண்டும்' என்பதாகும். சிவாஜிலிங்கமும் சுமந்திரனும் சில இடங்களில் பொருந்திப் போவது போல் இருந்தது. எனவே, இரண்டு கட்சிகளும் தங்களுக்கிடையில் ஒரு பொது முடிவுக்கு வந்தால் என்ன என்ற தொனிப்பட சுமந்திரன் கேட்டார். ஆனால், அதற்கு அங்கு கூடியிருந்த குடிமக்கள், சமூகப் பிரதிநிதிகள் உடன்படவில்லை. அது ஒரு பொதுத்தீர்மானத்துக்கு வருவதற்குரிய பொதுக்கட்டமைப்பை உருவாக்கும் நோக்கிலான சந்திப்பின் தொடக்கமே தவிர அங்கே உடனடியாக ஒரு பொது தீர்மானத்துக்கு வரவேண்டிய தேவை இல்லை என்று சுட்டிக்காட்டப்பட்டது. அருந்தவபாலன் அதை வலியுறுத்தினார். கடந்த ஆறாண்டுகால நிலைமாறுகால நீதிப் பயில்வின் தோல்விகளின் அடிப்படையில் பாதிக்கப்பட்ட மக்களின் பிரதிநிதிகள் உச்சமான கோரிக்கைகளை ஐ.நாவில் முன்வைக்க வேண்டும் என்று குடிமக்கள் சமூகங்களும், மத குருக்களும் கேட்டுக்கொண்டார்கள். ஐ.நாவில் என்ன கிடைக்கும் என்று சிந்திக்காமல் பாதிக்கப்பட்ட மக்கள் எதைக் கேட்கிறார்கள் என்பதனை கூர்மையாக வெளிப்படுத்தும் விதத்தில் ஐ.நாவுக்கான கோரிக்கை அமைய வேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்தினார்கள். சந்திப்பின் முடிவில் ஒரு குழு உருவாக்கப்பட்டது. அடுத்த சந்திப்பு வவுனியாவில் என்று தீர்மானிக்கப்பட்டது. வவுனியா சந்திப்புக்கு கஜேந்திரகுமார் வந்திருந்தார். அங்கே அவர் ஜெனிவா குறித்து விமர்சனபூர்வமாக உரையாற்றினார். குறிப்பாக பொறுப்புக்கூறலை ஜெனிவாவுக்கு வெளியே எடுக்கவேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார். இச்சந்திப்பில் பேசிய சுமந்திரனும் ஜெனிவாவைக் கையாள்வதில் அதாவது, கடந்த ஆறு ஆண்டுகளாக மனித உரிமைகள் பேரவையோடு தமது கட்சி முன்னெடுத்த நிலைமாறுகால நீதிச் செயற்பாடுகள் என்ற பரிசோதனை முயற்சி வெற்றிபெறவில்லை என்பதனை ஏற்றுக் கொண்டார். எனவே ஜெனிவாவைக் கடந்துபோவது என்பதில் மூன்று தரப்புக்கும் இடையில் ஒரு பொது நிலைப்பாடு காணப்பட்டது.

அவ்வாறு, ஜெனிவாவைக் கடந்து போவது வரையிலும் ஜெனிவாவில் அதாவது, மனித உரிமைகள் பேரவையில் எவ்வளவு விகிதத்துக்கு என்கேஜ் பண்ணுவது என்பதில் மூன்று கட்சிகளுக்கும் இடையில் விகித வேறுபாடுகள் இருந்தன. குறிப்பாக ட்ரிபிள்ஜஎம் என்றழைக்கப்பட்ட ஒரு பொறிமுறையை சிவாஜிலிங்கம் தொடர்ந்து வலியுறுத்தினார். ஆனால், கஜேந்திரகுமார் அதை ஆவணத்தில் இணைப்பதை ஏற்றுக் கொள்ளவில்லை. அந்தப் பொறிமுறை ஒரு நாட்டுக்கென்று விசேடமாக உருவாக்கப்பட்டது. அப்படி ஒரு பொறி முறையைக்கேட்டால் அந்தப் பொறி முறையை உருவாக்குவதோடு ஐ.நா. நின்று விடும் என்றும் அவர் சொன்னார். ட்ரிபிள்ஜஎம் எனப்படுவது நீதி விசாரணை ஒன்றுக்கான அடிப்படைத் தகவல்களை திரட்டும் ஒரு பொறிமுறை. இந்த பொறி முறையை நாங்கள் கேட்டால் ஐ.நா. அதையொத்த ஏதோ ஒரு பொறிமுறையை அறிமுகப்படுத்திவிட்டு பிரச்சினைக்குத் தீர்வாக அறிக்கைகளையே வெளியிட்டுக்கொண்டிருக்கும். மாறாக, அனைத்துலக குற்றவியல் நீதிமன்றத்துக்குப் போக வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைப்போம் என்று அவர் கேட்டுக்கொண்டார். அனைத்துலக குற்றவியல் நீதிமன்றம் ஒரு நீதி விசாரணையை முன்னெடுத்தால் அதற்கென்று சாட்சிகளையும் ஆதாரங்களையும் திரட்டும் ஒரு பொறிமுறையை அந்த நீதிமன்றமே உருவாக்கும். எனவே, அனைத்துலக குற்றவியல் நீதிமன்றத்துக்குப் போக வேண்டும் என்ற கோரிக்கைக்குள் ட்ரிபிள்ஜஎம் போன்ற ஒரு பொறிமுறைக்கான கோரிக்கையும் உள்ளடக்கப்பட்டிருக்கிறது என்று கஜேந்திரகுமார் வாதிட்டார். அதோடு, அண்மைய ஆண்டுகளில் அனைத்துலக குற்றவியல் நீதிமன்றத்தில் முன்னெடுக்கப்பட்ட வழக்குகளைச் சுட்டிக்காட்டி புதிய மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன என்றும் அவர் கூறினார். இவை அரசற்ற தரப்புக்களுக்கும் பாதிக்கப்பட்ட மக்களுக்கும் சாதகமானவை என்றும் அவர் கூறினார். இதனிடையே, இச்சந்திப்பிற்கு சில நாட்கள் கழித்து அதாவது ஆறாம் திகதி கொழும்பில் ஒரு சந்திப்பு நடந்தது. மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்தின் தலைவர் பாக்கியசோதி சரவணமுத்துவால் ஏற்கனவே ஒழுங்குசெய்யப்பட்ட அச்சந்திப்பில் மூன்று கட்சிகளின் தலைவர்களும் பங்குபற்றினார்கள். அதில் மூவரும் ஒன்றாக இணைந்து ஒரு பொது அணுகுமுறைக்கு வருவது என்று முடிவெடுக்கப்பட்டது. ஆறாம் திகதி நடந்த சந்திப்பின் விளைவாக ஏழாம் திகதியும் ஒரு சந்திப்பு கொழும்பில் ஒழுங்கு செய்யப்பட்டது. எனினும் அது வெற்றி பெறவில்லை. இவ்வாறானதொரு பின்னணியில் தமிழ் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட சந்திப்புகளின் தொடர்ச்சியாக மூன்றாவது சந்திப்பு கிளிநொச்சியில் ஒழுங்கு செய்யப்பட்டது. இச்சந்திப்பில், சுரேஷ் பிரேமச்சந்திரன், சிறீகாந்தா போன்றோரும் பங்குபற்றினர். பலத்த வாதப்பிரதிவாதங்களின் முடிவில் ஒரு பொது ஆவணத்தைத் தயாரிப்பது என்று மூன்று கட்சிகளும் ஒத்துக்கொண்டன. மூன்று மணித்தியாலங்களுக்கு மேலான சந்திப்பில் கட்சிகள் தங்களுக்கிடையே பலமான வாதப் பிரதிவாதங்களில் ஈடுபட்டன. அச்சந்திப்பில் பங்குபற்றிய திருமலை ஆயர் இரண்டு தடவைகள் கண்டிப்பான குரலில் இடையீடு செய்யவேண்டியிருந்தது.

விக்னேஸ்வரனின் கூட்டணி சர்வஜன வாக்கெடுப்பு என்ற கோரிக்கையைக் குறிப்பிட்ட ஆவணத்தில் இணைக்க வேண்டும் என்ற கோரிக்கையை தற்காலிகமாகத் தளர்த்தியது. அதேசமயம் கூட்டமைப்பு, நடந்தது இனப்படுகொலை என்பதனை ஏற்றுக் கொண்டது. எனவே இனப்படுகொலைக்கு எதிரான பரிகார நீதியைக் கேட்டு அனைத்துலக குற்றவியல் நீதிமன்றத்துக்குச் செல்வது என்ற ஒரு முடிவுக்கு மூன்று கட்சிகளும் ஒன்றாக வந்தன. விக்னேஸ்வரனின் கூட்டு வலியுறுத்திய ட்ரிப்பிள்ஐ.எம் என்ற பொறிமுறையை கஜேந்திரகுமார் காலவரையறையோடு ஏற்றுக்கொள்வது என்று சம்மதித்தார். இதன் பின்னர் ஒரு பொது ஆவணத்தை இறுதியாக்குவது என்று முடிவெடுக்கப்பட்டது. இப்படித்தான் மூன்று கட்சிகளும் ஒரு பொது இணக்கத்துக்கு வந்தன. கடந்த நாடாளுமன்ற தேர்தலில் கூட்டமைப்பின் ஏகபோகம் உடைந்தமை, மாற்று அணிக்கு மூன்று ஆசனங்கள் கிடைத்தமை, புலம்பெயர் தமிழ் அமைப்புக்களின் தலையீடு, கஜேந்திரகுமாரின் கட்சிக்குள் ஏற்பட்ட உடைவு போன்ற பல்வேறு காரணிகளின் விளைவாகவே இப்படி ஒரு தேவை கருதிய கூட்டை உருவாக்கவேண்டிய நிலைமைகள் கனிந்தன. கடந்த ஆறாண்டு காலமாக ஜெனிவாவை உத்தியோகபூர்வமாக கூட்டமைப்பு கையாண்டு வந்தது. இது விடயத்தில் சுமந்திரன் தொடக்கத்தில் தனியோட்டம் ஓட முயற்சித்தார் என்று ஒரு குற்றச்சாட்டு உண்டு. எனினும், டயஸ்போரா அமைப்புகளின் முன்முயற்சி காரணமாகவும் உள்நாட்டில் குடிமக்கள் சமூகங்களின் தலையீடு காரணமாகவும் ஒரு பொது அணுகுமுறைக்குப் போக வேண்டிய நிலைமைகள் கனிந்தன.

ஆனால், இந்த உடன்படிக்கை ஒரு கொள்கைக் கூட்டு அல்ல. நடந்தது இனப்படுகொலை என்பதனைக் கூட்டமைப்பு ஏற்றுக்கொண்டிருப்பதும் அதற்குரிய பரிகார நீதியைக் கேட்பது என்பதில் அது ஏனைய கட்சிகளுடன் உடன்பட்டமையும் ஒரு திருப்பகரமான மாற்றம். கூட்டமைப்பு பொதுத் தேர்தலில் பெற்ற தோல்விகளில் இருந்து பாடம் கற்கத் தயாராகிவிட்டது. எனவே, அது புதிய நிலைமைகளுக்கு ஏற்ப தன்னை சுதாகரித்துக் கொள்கிறது. ஆனால் நிச்சயமாக இது ஒரு கொள்கைக் கூட்டு அல்ல. இது ஒரு சமயோசிதக் கூட்டு. தேவை கருதிய விவகாரமையக் கூட்டு. இனிமேலும் உடனடிக்கு இதுபோன்ற கூட்டுக்களே சாத்தியப்படும். இவ்வாறான கூட்டுகளின் திரட்டப்பட்ட விளைவாக சிலசமயம் எதிர்காலத்தில் ஏதும் கொள்கை கூட்டு ஏற்படலாம். ஆனால், இங்கு முக்கியமாகச் சுட்டிக்காட்டப்பட வேண்டிய ஒரு மாற்றம் உண்டு. 2013ஆம் ஆண்டு முன்னாள் மன்னார் மறை மாவட்ட ஆயரின் தலைமையில் ஒரு சந்திப்பு ஒழுங்கு செய்யப்பட்டது. இச்சந்திப்பில் மன்னார் ஆயர் உட்பட கூட்டமைப்பின் மீது அதிருப்தி கொண்ட தமிழ் அரசியல்வாதிகளும் குடிமக்கள் சமூகப் பிரதிநிதிகளும் சம்பந்தரின் மீது கடுமையான விமர்சனங்களை முன்வைத்தார்கள். இச்சந்திப்பில்தான் ஒரு தமிழ் தேசியப் பேரவையை உருவாக்குவது என்றும் யோசிக்கப்பட்டது. சந்திப்பின் முடிவில் சம்பந்தர் ஆயரைப் பார்த்து பின்வரும் தொனிப்பட சொன்னார். 'பிஷப் நீங்கள் சொல்லுங்கோ ஆனால், இறுதி முடிவை நான்தான் எடுப்பேன்' என்று. ஆனால், எட்டு ஆண்டுகளின் பின்னர் கிளிநொச்சி சென்ற். திரேசாள் மண்டபத்தில் நடந்த சந்திப்பில் திருமலை ஆயர் கண்டிப்பான, சன்னமான குரலில் இடையீடு செய்தபொழுது எந்தவொரு கட்சித் தலைவரும் அவரைப் பார்த்து சம்பந்தர் சொன்னதைப்போல சொல்லத் துணியவில்லை. தமிழ் தரப்பு இறந்த காலத்திலிருந்து பெற்ற படிப்பினைகளின் விளைவா இது? குறிப்பாக தமிழ் அரசியலின் மீது தமிழ் குடிமக்கள், சமூகங்கள் செல்வாக்குச் செலுத்தலாம் என்ற ஒரு நம்பிக்கையை இது அதிகப்படுத்தியுள்ளதா?

**சுழியோடி**

# கச்சதீவு பிரச்சனையும் இலங்கை அரசியலும்

இலங்கை உலக வல்லரசுகளின் மிக முக்கியமான நாடாக பார்க்கப்படுவதற்கு மிக முக்கியமான ஒரு விடயத்தை அது தன்னகத்தே கொண்டுள்ளதேயாகும். ஆம் திருகோணமலை இயற்கை துறை முகம் அத்துடன் நான்கு பக்கமும் கடல்வழியால் சூழப்பட்ட ஓர் அழகான தீவாக இது காணப்படுவதும் அத்துடன் தெற்காசிய மற்றும் ஐரோப்பிய கடல் கண்காணிப்பின் மையப்பகுதியாக விளங்கும் ஓர் தனித்தன்மை வாய்ந்த நாடாக இது காணப்படுகின்றது. இரண்டாம் உலக மகா யுத்தம் இடம்பெறும் காலத்தில் இந்தியா.இலங்கை போன்ற நாடுகள் பிரித்தானியாவின் ஆளுகைக்குள் உட்பட்டு காணப்பட்டது. இரண்டாம் உலக யுத்தத்தின் போது ஜப்பான் ஜேர்மன் விமானங்கள் இலங்கையில் குண்டுவீச்சு தாக்குதல்களை மேற்கொண்டதாக தெரிவிக்கப்படுகின்றது. பிரித்தானிய கடற்படையினர் திருகோணமலை துறைமுகத்தில் இருந்து கடல் கண்காணிப்பில் ஈடுபட்டதுடன் இலங்கை.இந்தியா கடலின் நடுமையத்தில் மிக அழகான தீவாக காணப்படும் கச்சதீவு பகுதியில் தமது முக்கிய கண்காணிப்பு மையத்தை நிறுவி தமது பாதுகாப்பை உறுதிப்படுத்தியதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில் 1947 ஆம் ஆண்டு இந்தியாவுக்கும் 1948 ஆம் ஆண்டு இலங்கைக்கும் சுதந்திரத்தை வழங்கிவிட்டு பிரித்தானியா வெளியேறிய நிலையில் இந்தியாவில் இருந்து பாகிஸ்தான் என்ற நாடு உதயமாகியது. 1970 களில் இந்தியாவின் பிரதமராக உலகின் இரும்புப் பெண்மணி என வர்ணிக்கப்பட்ட இந்திராகாந்தி அவர்கள் பிரதமராக இருந்த நிலையில் இலங்கையில் சிறிமாவோ பண்டார நாயக்க அவர்கள் பிரதமராக இருந்தார். இவரே உலகின் முதல் பெண் பிரதமர் என போற்றப்பட்டவர் ஆவார். இக்காலகட்டங்களில் பாகிஸ்தான் நாட்டுக்குள் இடம்பெற்ற உள்நாட்டு கலவரங்களை இந்தியா பயன்படுத்தி பாகிஸ்தான் நாட்டின் மீது படையெடுத்து பாகிஸ்தானை இரண்டாக பிரித்து பங்களாதேஷ் என்னும் நாட்டை உருவாக்கி கொடுத்தது. இது 1971 ஆம் ஆண்டு இடம்பெற்றது. இதனை செயற்படுத்தி உலகையே அதிர்ச்சிக்குள்ளாக்கிய பெருமை அன்னை இந்திராகாந்தியை சாரும் இவ் யுத்தத்தில் பாகிஸ்தான் படுதோல்வியடைந்தது. இந்த யுத்தத்தில் இந்தியா வெற்றிபெறுவது கட்டாயமாக இருந்தது. காரணம் 1960 இல் இந்தியா - சீனா போரில் இந்தியா படுதோல்வியடைந்தது. இதற்கு பதிலடியாகவும் இராணுவ மேலாதிக்கத்தை ஆசிய பிராந்தியத்தில் வலுப்படுத்தவும் இவ் யுத்தத்தை இந்தியா பயன்படுத்தியது இவ் யுத்தத்திற்கு பின்னர் கச்சதீவு யாருக்கென்ற பிரச்சனை மெதுவாக உருவாகியது.

இந்தியாவின் இராமேஸ்வரத்தில் இருந்து கச்சதீவு 17 KM தூரத்தில் உள்ள நிலையில் இலங்கையின் தலை மன்னாரிலிருந்து இது சுமார் 20 KM தூரத்தில் உள்ள நிலையில் இருநாட்டு மீனவர்களுக்கிடையில் மோதல்கள் சிறிய அளவில் இடம்பெற்று வந்தது. இக்காலகட்டங்களில் இலங்கையில் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்க அவர்கள் இந்தியப் பிரதமர் இந்திராகாந்தியுடன் இவ் கச்சதீவு பிரச்சனை தொடர்பாக பேசி வந்த நிலையில் இந்திராகாந்தி அவர்கள் 1974 ஆம் ஆண்டு கச்சதீவை இலங்கைக்கு உரிமையாக்கி கொடுத்தார். இந்த உரிமம் செய்து கொடுக்கும் பொழுது இருநாட்டு மீனவர்களும் தமது மீன்பிடித்தொழிலை மேற்கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டது. இக்காலகட்டங்களில் ஈழப் போராட்டம் ஆரம்பமான நிலையில் ஈழத்திலிருந்து விடுதலைப்புலிகள் உட்பட ஏனைய இயக்க அமைப்புக்கள் இவ் கச்சதீவு ஊடாக வடபகுதி கடற்கரைப் பிரதேசங்களுக்கு ஆயுதங்கள் உணவுகள் போன்றவற்றை பரிமாற்றம் செய்வதற்கு பயன்படுத்தி வந்துள்ளனர். தங்கள் தங்கள் பிரதேசங்களுக்கு மட்டுமான மீன்பிடியினை மேற்கொண்டு வந்த இருநாட்டு மீனவர்களும் இவ் மீன்கள் ஏற்றுமதி செய்யும் நிலைக்கு வரும் பொழுது இருநாட்டு மீனவர்களுக்கும் இடையில் பிரச்சனைகள் அதிகரிக்க தொடங்கின. இதனால் 1976 ஆம் ஆண்டு இருநாட்டு தூதுவர்கள் ஊடாக மீண்டும் கச்சதீவு உரிமம் பத்திரத்தில் ஓர் விடயம் இணைக்கப்பட்டது. அது கச்சதீவு பகுதியில் இந்திய மீனவர்கள் மீன்பிடிப்பது முற்றாக தடை செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. அன்று தொடக்கம் இவ் கடல் பரப்புக்களில் இந்தியா - இலங்கை மீனவர்களுக்கிடையில் கடும் பிரச்சனைகள் உருவாகி பலர் உயிரிழந்த சம்பவங்கள் அதிகரித்து சென்றன. அன்று இந்திராகாந்தி அவர்கள் இலங்கை அரசை தன்வழியில் வைத்திருப்பதற்கும் தனது நாட்டு பிராந்திய நலனுக்காகவும் பாகிஸ்தான் சீனா போன்ற நாடுகளில் இருந்து தனது கடல் பாதுகாப்பை உறுதி செய்ய இலங்கை திருகோணமலைத் துறைமுகத்தை ஒருகாலத்தில் இலங்கை அரசிடம் இருந்து குத்தகைக்கு எடுக்கலாம் என எண்ணி கச்சதீவை இலங்கைக்கு கொடுத்துள்ளார்.

ஆனால் இன்று அந்த அழகிய கச்சதீவு இரத்ததீவாக மாறியுள்ளது. இந்தியாவின் தமிழ் நாட்டில் மாறி மாறி ஆட்சி செய்யும் அ.தி.மு.க மற்றும் தி.மு.க கட்சிகள் இவ் கச்சதீவு பிரச்சனையை மையமாக வைத்து தமது அரசியலை வெற்றிகரமாக செய்து வருகின்றனர். அதேவேளை இந்தியா மத்தியில் ஆட்சி செய்யும் இந்திரா காங்கிரஸ் மற்றும் பாரதிய ஜனதா கட்சியானர் இவ்வாறு கச்சதீவு கடற்பரப்பில் எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்டு இலங்கை கடற்படையால் கொல்லப்படும் மீனவர்கள் தொடர்பில் எதுவித கரிசனையும் கொள்வதில்லை. இந்தியாவின் ஏனைய கடற்பரப்பில் வேறு மாநில மீனவர்கள் கடலில் இறந்தால் உடனே மத்திய அரசு இந்தியா மீனவர் கடலில் மரணம் என அறிவிப்பதும் கச்சதீவு கடற்பரப்பில் உயிரிழக்கும் மீனவர் தொடர்பில் மத்திய அரசின் தகவல் இவ்வாறு தான் அமையும். அதாவது தமிழ்நாடு மீனவர் எல்லை தாண்டி மீன்பிடித்தொழிலில் ஈடுபட்ட பொழுது மரணமடைந்தார் எனவும் இலங்கை அரசுக்கு தமது அதிருப்தியை தெரிவிப்பதுடன் அந்த விடயம் முடிவடைந்துவிடும்.

இவ்வாறு மத்தியில் மாறி மாறி ஆட்சி செய்யும் இருகட்சியினரும் தமது நாட்டுக்குள் பாரபட்சம் பார்ப்பது கண்கூடாக தெரிகின்றது. இன்று தமிழ் நாட்டில் ஆட்சி செய்து வருகின்ற அ.தி.மு.க மற்றும் தி.மு.க கட்சிகள் கடலில் மீனவர் கொல்லப்பட்டவுடன் ஆவேசமாக அறிக்கைகள் விடுவது அஞ்சலி செலுத்துவது தி.மு.க அ.தி.மு.க வினருக்கிடையில் இது தொடர்பாக குற்றச்சாட்டுகள் சுமத்துவது என தமது அரசியலை மீனவர்களின் இறப்பின் மீது நடத்தி வருகின்றனர். 1976 ஆம் ஆண்டு கச்சதீவு உரிமம் மறுசீரமைக்கப்பட்ட ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும் பொழுது தி.மு.க தலைவர் கருணாநிதி எதிர்கட்சியாக இருந்தார். அப்பொழுது இது தொடர்பாக எதுவித எதிர்ப்பையும் செய்யாமல் இருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. அன்று கண்டுகொள்ளாமல்விட்ட நிலையில் அது இன்று நீறுபூத்த நெருப்பாக மாறியுள்ளது.

இலங்கையில் வடகிழக்கு கடற்பரப்பில் மீன்பிடித்தொழிலில் ஈடுபடும் எமது நாட்டு தமிழ் மீனவர்கள் 1980களில் இருந்து பெரும் துயரை சந்தித்து வருகின்றனர். இலங்கை கடற்படையின் தாக்குதல்களால் அப்பாவி வடபகுதி தமிழ் மீனவர்கள் பலர் கொல்லப்பட்டனர். பலர் கடலில் காணாமல் போயுள்ளனர் மீனவர்களின் வாழ்க்கை ஓர் இருண்ட யுகத்துக்குள் இருந்த காலம் தமிழ்நாட்டு மீனவர்கள்



அத்துமீறி வந்து வடபகுதி மீனவர்களின் வலைகளை சேதப்படுத்துவதும் படகுகளை சேதப்படுத்துவதாக இருந்த நிலையில் 1990 ஆம் ஆண்டு விடுதலைப்புலிகளின் கடற்புலிகள் உருவாக்கத்திற்கு பின்னர் அவர்களின் பாதுகாப்புடன் அச்சுறுத்தல் இன்றி தமது மீன்பிடித் தொழிலை மேற்கொண்டு வந்தனர். ஆனால் அப்பொழுது இருந்த சூழ்நிலையில் பிடிக்கப்படும் மீன்கள் வட பகுதிக்குள் மட்டும் விற்பனை செய்யப்பட்டு வந்தது. ஏற்றுமதி செய்ய முடியவில்லை. அத்துடன் இலங்கை இராணுவ முன்னேற்ற நடவடிக்கையால் வடகிழக்கு மீனவ சமுதாயம் பல இன்னல்களை சந்தித்தது. குறிப்பாக வல்வெட்டிதுறை, மயிலிட்டி, காங்கேசன்துறை, மாதகல், ஊர்காவற்துறை, திருகோணமலை, மட்டக்களப்பு கரையோரப்பகுதிகள், முல்லைத்தீவு கடற்கரை பகுதிகள் என அனைத்து பகுதிகளிலும் இருந்த மீனவ குடும்பங்கள் இடம்பெயர்ந்த நிலையில் வாழ்வாதார நிலையில் மிகவும் மோசமடைந்து இருந்தன. அத்துடன் 2004 ஆம் ஆண்டு ஏற்பட்ட சுனாமி அனர்த்தத்தின் போது பல்லாயிரம் மீனவர்கள் கடலில் இறந்து போயினர். பலகோடி பெறுமதியான சொத்துக்கள் அழிவடைந்தன.

இந்நிலையில் 2009 ஆம் ஆண்டு யுத்தம் மௌனிக்கப்பட்டதன் பின்னர் சில கடற்படை கட்டுபாடுகளுடன் மீன்பிடித்தொழிலை மேற்கொண்டு வரும் இம் மீனவர் யுத்தத்தின் பின்னர் பிடிக்கப்படும் மீன்களை தென்பகுதிக்கு ஏற்றுமதி செய்து ஒருவாறு தமது வாழ்வாதாரத்தை உயர்த்த இருந்த நிலையில் தற்பொழுது எல்லை தாண்டி வந்த மீன்பிடித்தொழிலை தமிழ்நாட்டு மீனவர்கள் மேற்கொண்டு வருவதால் கடந்த சில வருடங்களாக பாரிய பிரச்சனைகளை வடகிழக்கு மீனவ சமுதாயம் சந்தித்து வருகின்றது. அண்மையில் எல்லை மீறி வந்த இந்திய மீனவர்களை கடலில் தடுத்து நிறுத்திய இலங்கை கடற்படையினரின் படகினை மோதி விபத்துக்குள்ளானதில் அப்பாவி தமிழக மீனவர்கள் நால்வர் உயிரிழந்த சம்பவம் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது. ஈழத் தமிழர்களின் போராட்டங்களுக்கு தமிழ் நாட்டு தொப்புள்கொடி உறவுகள் பல மகத்தான உதவிகளை புரிந்துள்ளனர்.


எமக்காக நேசக்கரத்தை நீட்டியவர்கள் இந்தியா இராணுவம் இலங்கையில் செய்த படுகொலைகளுக்கு தமிழ்நாட்டு மக்கள் தமது பலத்த எதிர்ப்பை வெளியிட்டதுடன் இந்தியா இராணுவம் திரும்பி சென்றபொழுது தமிழக வீரர்களை விமான நிலையத்தில் வைத்து வரவேற்பு கொடுப்பதை தமிழ்நாட்டு மக்கள் தவிர்த்து இருந்தனர். இவ்வாறு எமது போராட்டத்துக்கும் மிகப்பெரும் பங்களிப்பை செய்த எமது தமிழ் நாட்டு உறவுகள் தற்பொழுது இந்த மீனவ பிரச்சனையால் ஈழத்தமிழர்களுக்கும் தமிழ்நாட்டு தமிழர்களுக்கும் இடையில் பலத்த விரிசலை ஏற்படுத்தி நிற்கின்றது. அண்மையில் யாழ் பல்கலைக்கழக நினைவு தூபிஇடிப்பு விவகாரத்தில் ஒட்டுமொத்த தமிழக அரசியல் தலைமைகளும் கண்டனம் தெரிவித்ததுடன் ம.தி.மு.க கட்சி தலைவரும் ஈழ ஆதரவாளருமான வை.கோ அவர்கள் பேரணியாக சென்று தமது எதிர்ப்பை தெரிவித்த நிலையில் கைது செய்யப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டார். இவ்வாறு ஈழத்தமிழர்கள் பால் தமிழ் நாட்டு அரசியல் தலைமைகளில் இருந்து மக்கள் வரை தமது ஆதரவை இன்று வரை வழங்கி வரும் நிலையில் தமிழக மீனவர்கள் மற்றும் ஈழத்து மீனவர்களுக்கிடையில் ஏற்படும் மோதல்களை வைத்து தமிழக மக்களுக்கு உள்ள ஈழத்தமிழர்கள் பால் உள்ள அனுதாபத்தை சிதைத்து ஈழத் தமிழர்களின் உரிமைகளை பெறுவதற்கு தமிழ் நாட்டு மக்களின் ஆதரவை சிதைப்பதற்கு இலங்கை அரசானது பின்புலச் செயற்பாட்டில் ஈடுபட்டுவருவது போல் தெரிகின்றது.

இப் பிரச்சனைக்கு ஓர் நிரந்தர தீர்வை பெற்றுத்தர பின்னிற்பதும் கடற்தொழில் அமைச்சராக ஓர் தமிழரை நியமித்துள்ளமையும் அவரும் ஆரம்பகால ஆயுதப்போராட்ட அமைப்பில் இருந்ததுடன் தமிழ்நாட்டு மக்களுடன் மிகவும் பரீட்சமான நிலையில் அவரை கடற்தொழில் அமைச்சராக நியமித்து கடலில் எல்லை மீறும் மீனவர்களை தமது கடற்படையில் கொல்ல ஏவிவிட்டு பிரச்சனையை பெரிதாக்கி இருநாட்டு தமிழ் மக்களுக்கிடையே விரிசலை உருவாக்க முயற்சிக்கின்றது. இந்தியா மத்திய அரசும் பலமுறை இராமர் பாலம் கட்டும் முயற்சியை மேற்கொண்ட பொழுதும் இலங்கை அரசானது அதற்கு அனுமதி வழங்கவில்லை தலை மன்னாருக்கும் இராமேஸ்வரத்துக்கும் இடையில் வெறும் 35 KM தூரம் தான் உள்ளது. பாலம் கட்டப்பட்டால் தரைவழிப்போக்குவரத்துக்கள் இடம்பெறும் ஆனால் இலங்கை அரசு பாலம் கட்டப்பட்டால் ஒருகாலத்தில் இந்தியாவின் ஒரு மாநிலமாக இலங்கை மாறக்கூடும் என்னும் அச்சத்தில் அதற்கு அனுமதி வழங்கவில்லை. இவ்வாறு தமது சுயநல அரசியல் இலாபங்களுக்காகவும் தமது நாட்டு பிராந்திய நலன்களுக்காகவும் இருநாட்டு தலைமைகளும் செயற்பட்டுவரும் நிலையில் அப்பாவி மீனவர்கள் தினம் கடலில் பலியாகி போவது தொடர் கதையாக போகின்றது. கச்சதீவு என்னும் அழகான தீவு இப்படியொரு பிரச்சனையான தீவாக மாறியது யார் செய்த பாவம். ஆலைப்பரிந்து எழும்பும் கச்சதீவு கடல் அலை எப்பொழுது அமைதியாகும். மீனவர்களின் வாழ்க்கை எப்பொழுது வெளிச்சம் பெறும் கடல் அலைகளில் நின்று தமது சுயநல அரசியலை விட்டு சரியான ஓர் முடிவுக்கு வந்து இம் மீனவர்களின் வாழ்க்கையை மேம்படுத்த அனைத்து தரப்பினரும் முன்வர வேண்டும் என்பதே இருநாட்டு மீனவ சமுதாயத்தின் கோரிக்கையுடன் இருநாட்டு மக்களின் வேண்டுதல்களும் ஆகும்.

**தாயகத்தான்**

# சர்வதேச சக்திகள் இலங்கையில் தமது ஆதிக்கத்தை செலுத்த முனைவதன் பின்னணி அரசியல்

பாராளுமன்ற நெருக்கடி, யாப்பு நெருக்கடி எனப் பல்வேறு நெருக்கடிகள் இலங்கையின் அரசியல் களத்தில் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. இந் நெருக்கடிகளின் பின்னால் இந்தியா, சீனா, அமெரிக்காபோன்ற சர்வதேச நாடுகளும் தமது அழுத்தத்தை பிரயோகிப்பது மட்டுமல்லாமல், இதனைப் பயன்படுத்தி இலங்கை மண்ணில் தமது காலை வலுவாக ஊன்ற முயற்சிக்கின்றன. இவ்வாறு சர்வதேச சக்திகள் இலங்கையில் தமது ஆதிக்கத்தை செலுத்த முனைவதன் பின்னணி அரசியலை ஆராய்கின்றது இக்கட்டுரை.




சிறீலங்கா சுதந்திரக் கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி ஆகிய இரு பிரதான கட்சிகளும் இலங்கையின் கடனை அதிகரித்தும், தனியார்மயமாக்கலை அதிகரித்துமே தமது ஆட்சியை மேற்கொள்கின்றன. அரசியல் பொருளாதார ரீதியாக எந்தக் கொள்கையின் அடிப்படையில் நாட்டை ஆட்சி செய்வது என்பதில், ஐக்கிய தேசியக் கட்சிக்கும், சுதந்திரக்கட்சிக்கும் ஒரே நிலைப்பாடுதான் உண்டு. அதாவது கடன் மற்றும் தனியார் மயப்படுத்தலை அதிகரித்தலே அவற்றின் பிரதான கொள்கைகளாகும். அதிலும் குறிப்பாக வெளிநாடுகளிலிருந்து கடனைப் பெற்று நாட்டை ஆட்சி செய்தலே இரு கட்சிகளினதும் அடிப்படைப் பொருளாதாரக் கொள்கையாக உள்ளது. யாரிடம் கடனைப் பெற்றுக்கொள்வது, வாங்கிய கடனை எவ்வாறு நிர்வகிப்பது என்பதிலேயே இரு கட்சிகளும் மாற்றுக்கருத்தைக் கொண்டிருக்கின்றன. ஐக்கிய தேசியக் கட்சிக்கு தனது தார்மீக ஆதரவை வழங்குவதன் ஊடாக தமது நிலைப்பாடும் அது தான் என்பதை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் வெளிப்படுத்துகின்றது. ஆகவே கடன் மற்றும் தனியார் மயப்படுத்தலை அதிகரிக்க வேண்டும் என்பதில் அனைத்துக் கட்சிகளுக்கும் மாற்றுக்கருத்தில்லை என்பது தெளிவாகின்றது.

ஐ.எம்.எப் மற்றும் மேற்குலக நாடுகளின் ஆதிக்கத்திற்குட்பட்ட ஐக்கிய தேசியக் கட்சியானது அவர்களிடம் கடனைப் பெறுவதிலும், அவர்களின் நலன்களை முன்னிலைப்படுத்துவதையுமே விரும்பு கின்றது. கடந்த காலங்களில் ஒவ்வொரு வருட பட்ஜெட்டையும், மேற்குலக நாடுகளின் நலன்கருதி இயங்கும் ஐ.எம்.எப் இன் ஆதரவுடனேயே ஐக்கிய தேசியக் கட்சியானது தாக்கல் செய்தது. அதில் ஐ.எம். எப் இன் கோரிக்கைகளான தனியார் மயப்படுத்தல், மக்களுக்கான இலவச சேவைகளைக் குறைத்தல் போன்ற அம்சங்கள் உள்ளடக்கப்பட்டிருந்தன. அதனடிப்படையிலேயே சைட்டத்தினையும் (SAITM) கடந்த வருடம் தனியார் மயப்படுத்த முனைந்தது ஐக்கிய தேசியக் கட்சி. எனினும் மக்களின் எதிர்ப்பால் பின்னர் அது கைவிடப்பட்டது யாவரும் அறிந்ததே.

மறுபுறத்தில், மகிந்த ராஜபக்ச சீனாவிடமிருந்து கடன் வாங்குவதையே விரும்புகிறார். இலங்கையில் யுத்தம் இடம்பெற்றபொழுது சீன அரசானது அதிகளவான நிதியை மகிந்த அரசுக்கு அளித்தமை யாவரும் அறிந்ததே. அதன் பிரதிபலனாகவே அம்பாந்தோட்டை துறைமுகம், காலி பிரதேசங்கள் ஏற்கனவே சீனாவிற்கு தாரை வார்த்துக் கொடுக்கப்பட்டுவிட்டது. 2005இல் இலங்கையின் அந்நிய நேரடி முதலீடுகளில், சீனாவின் முதலீடானது வெறும் ஒரு மில்லியன் டொலர்களுக்கும் குறைவானது ஆகும். ஆனால் 2014 இல் சீனாவின் முதலீடு 400 மில்லியன் டொலர்கள் ஆகும். மகிந்த ஆட்சிக் காலத்திலேயே இலங்கையில் பாரியளவிலான பணத்தை முதலீடு செய்து இலங்கையை தனது கட்டுப்பாட்டில் வைக்கத் தொடங்கியிருந்தது சீனா. தனது புதிய பட்டுப் பாதைக்கு வலு சேர்க்கும் வகையில் இலங்கையில் தனது ஆதிக்கத்தை நிலை நிறுத்த விரும்பும் சீனா, அதனை தமது நலன் விரும்பியான மகிந்தவின் ஊடாக சாத்தியப்படுத்த முனைகிறது. அதேவேளை தமிழ் தேசியக் கூட்டமைபின் ஆதரவுடன் இந்தியாவானது தனது ஆதிக்கத்தையும் இலங்கை அரசியலில் செலுத்துகிறது. **ஆகவே ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடாக மேற்குலக நாடுகளும், மகிந்தவின் ஊடாக சீனாவும், தமிழ் தேசியக் கூட்டமைபின் ஊடாக இந்தியாவும் தமக்கிடையிலான ஒரு அதிகாரப் போட்டியினை இலங்கை மண்ணில் நிகழ்த்துகிறது.** அதிலும் குறிப்பாக கடன் வழங்குகிறோம் என்னும் போர்வையில் இலங்கையில் புகுந்த சீனாவும், மேற்குலக நாடுகளும் தமது பலப்பரீட்சையை நிகழ்த்தும் முக்கிய கேந்திர நிலையமாக இலங்கையினைப் பாவித்து வருகின்றது. இலங்கையின் பூகோள அரசியலின் முக்கியத்துவத்தை உணர்ந்த இந்நாடுகள் தமது பலத்தை இலங்கையில் நிறுவவே முனைகின்றன.

ஒரு புறம், மகிந்த பிரதமரானதும் சீனத் தூதுவர் மகிந்தவின் கொழும்பு வாசஸ்தலத்திற்கு நேரடியாகவே சென்று தமது வாழ்த்துக்களைத் தெரிவித்தார். மறு புறம் அமெரிக்க ராஜாங்க செயலாளர் மீண்டும் ரணிலை பிரதமராக்க வேண்டுமெனக் கோரி, மைத்திரி அரசின் மீது தமது அழுத்தத்தை பிரயோகித்தார். தமது சார்புடையவர்களை அதிகாரத்தில் நிறுத்தவே சீனாவும் - அமெரிக்காவும் விரும்புகின்றது என்பது இதிலிருந்து தெளிவாகப் புரிகின்றது.

இவை அனைத்தும் அரசியல் களத்தின் மேல் தளத்தில் இடம்பெறும் பிரச்சினைகள், மறுபுறத்தில் மக்களின் எதிர்பார்ப்பானது வேறு வடிவத்தில் உள்ளது. பாராளு மன்றத்தில் யார் அதிக ஆசனங்களை வைத்திருந்தாலும் அல்லது யார் பிரத மராக வந்தாலும் மக்களுக்கு அது பற்றிக் கவலையில்லை. பொருளாதார வளர்ச்சி, ஜனநாயகம் உறுதிப்படுத்தப்படவேண்டும், தமது உரிமைகள் பாதுகாக்கப்படவேண்டும், தமது வாழ்வாதாரப் பிரச்சினைகள் தீர்க்கப்படவேண்டும் என்பதே மக்களின் கோரிக்கையாகவும், எதிர்பார்ப்பாகவும் உள்ளது. ஆனால், மக்களின் இத்தகைய கோரிக்கைகள் நிறைவேற்றப்படாதவிடத்து மக்கள் புதிய திசையை நோக்கி நகருகின்றனர். இதன் விளைவாகவே, ஆட்சியில் பங்கெடுக்காத போதிலும், கடந்த காலத் தேர்தல்களில் கஜேந்திரகுமாருக்கும், மகிந்தவுக்கும் அதிகளவான வாக்குகள் விழுந்தன என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் மக்களின் கோரிக்கைகள் நிறைவேறாத பொழுது ஒரு சில மக்கள் தொகுதியினர் இன ரீதியாக, பிரதேச ரீதியாக பிளவுபட்டு மதவாத இனவாத பிற்போக்கு அரசியலை நோக்கி தள்ளப்படுவதும் நிகழ்வதுண்டு. இதனால் மக்கள் மத்தியில் பிளவுகள் ஏற்படுகின்றது. இப்பிளவினையே அரசியல் கட்சிகள் தமது வாக்கு வேட்டைக்கு சாதகமாக பயன்படுத்திக் கொள்கின்றன.

சர்வதேச சக்திகளின் ஆதரவுடன் நடத்தப்பட்ட இறுதி யுத்தம் முடிவடைந்த பின்னர் சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரிக்கும், வெளிநாட்டு முதலீடு அதிகரிக்கும் இதன் மூலம் இலங்கையின் பொருளாதாரமானது அபார வளர்ச்சி அடையும் என்றே கருதப்பட்டது. எதிர்பார்த்தது போல் சுற்றுலாப் பயணிகளின் வருகை ஓரளவுக்கு அதிகரித்த போதிலும், வெளிநாட்டு முதலீடுகள் அதிகரிக்கவில்லை. ஆகவே வீழ்ந்து கொண்டிருக்கும் இலங்கைப் பொருளாதாரத்தை மீட்டெடுக்க சுற்றுலாத் துறையிலிருந்து கிடைக்கும் வருமானம் மட்டும் போதுமானதாக இருக்கவில்லை. இலங்கையின் பொருளாதாரத்தை மீட்டெடுக்க எந்தக் கட்சியும் சரியான பொருளாதாரக் கொள்கை யினைக் கொண்டிருக்கவில்லை.


இதனால் கொந்தளிக்கும் மக்களை வேறு பக்கம் நோக்கி திருப்புதலை அதாவது இனவாதம், மதவாதம், அடிப்படைவாதத்தை நோக்கி திருப்பும் செயலையே இரு பெரும் கட்சிகளும் செய்து கொண்டிருக்கின்றன. எந்தக் கட்சியும் மக்கள் நலனை முன்வைத்துத் தமது அரசியலை முன்னெடுப்பதில்லை. மாறாக ஒவ்வொரு அரசியல் தலைமைகளும் வாக்குகளைப் பெறுவதற்காக தத்தமக்கென ஒவ்வொரு உத்திகளைக் கையாளுகின்றனர். சிங்கள மக்கள் மத்தியில் இனவாதத்தை தாண்டி அதன் மூலம் தனது வாக்கு வங்கியை நிரப்பிக் கொள்தலே மகிந்தவின் அரசியலாகக் காணப்படுகின்றது. "மகிந்தவின் எழுச்சியை தடுக்க வேண்டும் அதற்கு நாங்கள் பலமாக இருக்கவேண்டும் ஆகவே எங்களுக்கு வாக்கு போடுங்கள்" என மகிந்த மீதான பயத்தைக் காட்டி தமிழ் மக்கள் மத்தியில் தமது வாக்குகளைப் பெற்றுக் கொள்கின்றது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு. தமிழ் - சிங்கள - முஸ்லிம் என அனைத்து இன மக்களிடமும் தனது வாலை ஆட்டி அதன் மூலம் அனைத்து இன மக்களிடமும் சிறிது சிறிது வாக்குகளைப் பெற்று, ஆட்சியமைக்கத் தேவையான ஆசனங்களைக் கைப்பற்றுதலே ரணி லின் அரசியல் ராஜதந்திரமாகக் காணப்படு கின்றது.

எப்படியாவது ஆட்சியைப் பிடிக்க வேண்டும் என்பதே அனைத்துக் கட்சிகளினதும் பொதுக் கொள்கையாகக் காணப்படுகின்றதே தவிர, மக்கள் நலன் என்பது இரண்டாம் பட்சமாகவே கருதப்படுகின்றது. அண்மையில் பாராளுமன்ற நெருக்கடி ஏற்பட்ட பொழுது ஐக்கிய தேசியக் கட்சியும், சுதந்திரக் கட்சியும் மாறி மாறி தமது ஆதரவாளர்களை வீதிக்கு இறக்கி போராட்டங்களை மேற்கொண்டதைப் பார்த்தோம். தமது பிரச்சினைகளுக்காக மக்களை வீதிக்கு அழைக்கும் இக்கட்சிகள், மக்கள் பிரச்சினைகளுக்காக மக்களை வீதிக்கு அழைப்பதில்லை. மக்கள் பிரச்சினைகளை முன்வைத்து, மக்களை ஒன்றினைத்து மக்கள் போராட்டங்களை, மக்களுக்கான அரசியலை முன்னெடுக்க ஒரு கட்சியும் தயாராகவில்லை. மாறாக மக்களைப் பிளவுபடுத்தி, அதனால் விளையும் இனவாத மதவாத அரசியலையே முன்னெடுக்க விரும்புகின்றனர். இது அரசியல் கட்சிகளின் போதாமையினைக் காட்டுகின்றது. இதனைத் தாண்டி செல்ல அவர்கள் முயற்சிப்பதில்லை. ஆகவே, இந்திய சீன அல்லது அமெரிக்கா போன்ற சர்வதேச சக்திகளின் நலனுக்கு ஏற்ப இயங்கும் கட்சிகளின் பின்னால் செல்லாமல் மக்கள் முற்போக்கான அரசியலை நோக்கி நகர வேண்டும். மக்கள் திரட்சியானது சரியான அதிகாரத்தை நோக்கி, மக்கள் சார்பான கொள்கை கொண்ட அமைப்பை நோக்கி நகர வேண்டும். அதிகாரம் என்பது பாராளுமன்றத்திலோ அல்லது யாப்பிலோ இல்லை. மாறாக அதிகாரம் என்பது மக்களின் கைகளிலேயே தங்கியுள்ளது. இதனை மக்கள் உணரும் போது தான் அனைத்து இன மக்களுக்கும் தேவையான விடுதலை எட்டப்படும்.

**நெற்றிப்பொறியன்**



# பிராந்தியச் செய்திகள்



## நாடு முழுவதும் 120 பாடசாலைகளில் ஆரோக்கியமான சுகாதார அறைகள்

மாணவர்களின் ஆரோக்கியத்தை பாதுகாக்க 120 பாடசாலைகளுக்கு உதவும் அமெரிக்கா வலய மற்றும் மாகாண கல்வி மற்றும் சுகாதார சேவைகள் அதிகாரிகளுடன் ஒருங்கிணைந்து நாடு முழுவதும் 120 பாடசாலைகளில் சுகாதார அறைகளை அமைத்து மாணவர்களின் ஆரோக்கியத்தை பாதுகாக்க உதவுவதற்கான முன்னெடுப்பொன்றை அமெரிக்கா மேற்கொண்டுள்ளது.

கொவிட்-19 க்கு எதிரான அடிப்படை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை உறுதிப்படுத்துவதற்கான கல்வி அமைச்சின் பரிந்துரைகளை இந்த சுகாதார அறைகள் ஊக்குவிப்பதுடன், படுக்கைகள், மெத்தைகள், முதலுதவி உபகரணங்கள், நகர்த்தக்கூடிய மறைப்பு திரைகள் மற்றும் நீர் விநியோப்பான்கள் ஆகியவற்றை இவை கொண்டிருக்கும். தேவைப்படும் பட்சத்தில் இந்த அறைகள் மாணவர்களுக்கான தனிமை மற்றும் தொடர்புடைய கவனிப்பையும் வழங்கும்.

## மேல் மாகாணத்திலுள்ள அனைத்து பாடசாலைகளும் பெப். 15 இல் திறப்பு

மேல் மாகாணத்திலுள்ள பாடசாலைகளில் அனைத்து வகுப்புகளையும் உரிய சுகாதார வழிகாட்டுதல்களின்படி எதிர்வரும் பெப்ரவரி 15ஆம் திகதிக்கு முன்னர் ஆரம்பிப்பது தொடர்பில் ஆராய்ந்து வருவதாக கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல் .பீரிஸ் தெரிவித்தார்.

மார்ச் மாதத்தில் க.பொ.த. சாதாரண பரீட்சைக்குத் தோற்றவுள்ளன மாணவர்களுக்காக மேல் மாகாணத்திலுள்ள பாடசாலைகள் திறக்கப்பட்டுள்ள நிலையிலேயே இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள சில பாடசாலைகளில் மேற்கொள்ளப்படும் கல்விச் செயற்பாடுகளை ஆராய நேற்று வெள்ளிக்கிழமை கண்காணிப்பு விஜயம் மேற்கொண்டிருந்த சந்தப்பத்திலேயே அவர் இவ்வாறு கூறினார்.

தினசரிமாணவர்களுடன்தொடர்புகொள்ளும்ஒருகுழுவாகஆசிரியர்களும் உள்ளமையால் அவர்களுக்கும் முன்னுரிமை அளிப்பது நியாயமானது. கொவிட்19 தடுப்பூசியை ஆசிரியர்களுக்கும் பெற்றுக் கொடுப்பது குறித்து அரசாங்கத்துடன் கலந்துரையாடப்படமெனவும் அவர் கூறினார்.

பொறுப்புள்ள அரசாங்கமாக, அந்த பொறுப்பிலிருந்து விடுபட நாங்கள் தயாராக இல்லை.மேல் மாகாணத்தின் கொழும்பு, களுத்துறை மற்றும் கம்பஹா மாவட்டங்களில் உள்ள பாடசாலைகளை திறக்க நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் அந்த அந்த பாடசாலைகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

பெப்ரவரி 15ஆம் திகதிக்கு முன்னர் அனைத்துப் பாடசாலைகளையும் ஆரம்பிப்பது தொடர்பில் ஆராய்ந்து வருவதாகவும் மேற்கு மாகாணத்தில் உள்ள முன்பள்ளிகள் மற்றும் ஆரம்ப வகுப்புகளை தொடங்குவது குறித்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் கூறினார்.

## யாழ். பஸ் நிலையத்தில் தமிழ்மொழி முதலில்

- சீரமைக்கப்பட்ட பெயர்ப்பலகை முதல்வரிடம் கையளிப்பு

யாழ்ப்பாணம் நெடுந்தூர பஸ் நிலையத்தின் தரிப்பிடப் பலகையில் தமிழ்மொழி முதலாவதாக மாற்றும் பணி மாநகர சபையினால் முன்னெடுக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் மாநகர முதல்வர், சட்டத்தரணி வி.மணிவண்ணனின் பணிப்புக்கமைய உள்ளூர் அச்சக நிறுவனம் ஒன்றின் ஊடாக தரிப்பிட பலகைகள் சீரமைக்கப்படுகின்றன.

நிற்கும் இடங்களைக் குறிக்கும் காட்சிப் பலகைகளில் சிங்கள மொழி முதலிலும் தமிழ்மொழி இரண்டாவதாகவும் இடம்பெற்றமை சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தது. அது தொடர்பில் யாழ்ப்பாணம் மாநகர முதல்வரின் அறிவுறுத்தலில் உள்ளூர் அச்சகம் ஒன்றின் ஊடாக தரிப்பிடப் பலகைகளை சீர்செய்ய சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டது. தரிப்பிட பலகையில் தமிழ்மொழி முதலிலும் சிங்கள மொழி இரண்டாவதாகும் இடம்பெறும் வகையில் சீரமைக்கப்பட்ட பலகை ஒன்று நேற்று முதல்வரிடம் கையளிக்கப்பட்டது.

அதனையடுத்து அனைத்து பலகைகளும் அகற்றப்பட்டு சீரமைத்து சில தினங்களுக்குள் மீளவும் பொருத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

## தனிமைப்படுத்தல் சட்ட மீறல் இதுவரை 2,751 பேருக்கு எதிராக வழக்குத் தாக்கல்

நாட்டில் நடைமுறையிலுள்ள தனிமைப்படுத்தல் சட்டங்களை மீறிய குற்றத்திற்காக இதுவரை 2,751பேருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்துள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

அது தொடர்பில் தெரிவித்துள்ள பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ் மாஅதிபர் அஜித் ரோஹன, நேற்று வரையான காலப்பகுதியில் தனிமைப்படுத்தல் சட்டங்களை மீறிய 2,823 பேர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் அவர்களில் 2,751 பேருக்கு எதிராக வழக்கு தொடர்ந்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

அதேவேளை நேற்று முன்தினம் தனிமைப்படுத்தல் விதிகளை மீறி செயல்பட்ட 15 பேர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை பாடசாலைகளுக்கு மாணவர்களை ஏற்றிச் செல்லும் வாகனங்கள் சுகாதார வழிமுறைகளை பின்பற்றி செயற்படுகின்றனவா என்பதை ஆராயும் வகையில் விசேட நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## நாசிவன்தீவில் மணல் கழுவுதல் நடவடிக்கையை உடன் நிறுத்தவும்

- மக்களுக்கு பாதிப்பு ஏற்படுகின்ற எந்த திட்டமும் செயற்படுத்தப்படாது
- இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன்

வாழைச்சேனை நாசிவன்தீவு கிராமத்தில் மணல் கழுவுதல் மற்றும் அகழ்வாராட்சி திட்டத்தினை உடனடியாக நிறுத்துமாறும், மக்களுக்கு பாதிப்பு ஏற்படுகின்ற எந்தவொரு செயற்றிட்டத்தினையும் அரசாங்கம் செயற்படுத்தாது என இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரன் தெரிவித்தார்.

வாழைச்சேனை பிரதேச செயலாளர் பிரிவின் நாசிவன்தீவு கிராமத்தில் அண்மையில் அமைக்கப்பட்ட இலங்கை மீன்பிடித்துறை முகங்கள் கூட்டுத்தாபனத்தின் மணல் கழுவுதல் மற்றும் அகழ்வாராட்சி திட்டத்தை நிறுத்துமாறு பிரதேச மக்கள் போராட்டத்தில் ஈடுபட்ட நிலையில் விசேட ஒன்று கூடல் செயலக கேட்போர் கூடத்தில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில், நாசிவன்தீவு கிராமத்தில் மணல் கழுவுதல் மற்றும் அகழ்வாராட்சி திட்டமானது சுற்றால் அதிகார சபையின் அனுமதி பெறப்படாமல் உள்ளது. அத்தோடு கரையோர பாதுகாப்பு திணைக்களத்தினரின் கருத்தின் பிரகாரம் மண் கழுவும் பட்சத்தில் தண்ணீர் உவர் தன்மை ஏற்படும் என்று கூறப்பட்டுள்ளது.

அத்தோடு கிராம அதிகாரியின் தனியார் காணியில் மணல் அகழ்வும் இடம்பெற்றுள்ளது. குறித்த மக்கள் குடிநீர் பிரச்சினையை எதிர்நோக்கி வரும் நிலையில் பல்வேறுபட்ட பிரச்சினைகளுடன் வாழ்ந்து வருகின்றனர். மக்களின் நலன்களைத்தான் அரசாங்கம் முன்னெடுத்து வருகின்றது.






## ஏமாலி பட நடிகருக்கு ஜோடியான ஆனந்தி

தமிழ் சினிமாவில் பிரபல நடிகையாக இருக்கும் ஆனந்தி தற்போது ஏமாலி பட நடிகர் சாம் ஜோன்சுக்கு ஜோடியாக நடிக்க இருக்கிறார்.

ஏமாலி, தர்மபிரபு, லியா படங்களில் நாயகனாக நடித்தவர் சாம் ஜோன்ஸ். மதுரையை கதைக்களமாக கொண்டு உண்மை சம்பவத்தை மையமாக வைத்து உருவாகும் படத்தை அவர் தயாரித்து நாயகனாக நடிக்கிறார். இதில் சாம் ஜோன்சுக்கு ஜோடியாக கயல் ஆனந்தி நடிக்கிறார்.

இன்னும் பெயரிடப்படாத இப்படத்தை இயக்குனர் மோகன் ராஜாவிடம் உதவி இயக்குனராக பணியாற்றிய தாமரை செல்வன் இயக்குகிறார். இப்படத்தின் கதையை நடிகர் சாம் ஜோன்ஸின் தந்தை எம்.ஜோன்ஸ் எழுதியுள்ளார். கதையின் முக்கியதுவத்தை உணர்ந்து இப்படத்தை நடிகர் சாம் ஜோன்ஸ் தனது தயாரிப்பு நிறுவனம் "மாஸ் சினிமாஸ்" சார்பாக தயாரிக்கிறார்.

தெலுங்கு நடிகை சுலேகவாணி, முனிஸ்காந்த், வேலா ராமமூர்த்தி, ஏ.வெங்கடேஷ் ஆகியோர் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கின்றனர். வில்லன் கதாபாத்திரத்தில் நடிக்க பிரபல இயக்குனர் ஒருவரை ஒப்பந்தம் செய்யவுள்ளதாக தயாரிப்பு தரப்பு சார்பில் கூறப்பட்டுள்ளது.



## முன்னணி காமெடி நடிகருக்கு ஜோடியாகும் நடிகை சாய் பல்லவி



மலையாளத்தில் ப்ரேமம் திரைப்படத்தின் மூலமாக நடிகையாக அறிமுகமானவர் தான் நடிகை சாய் பல்லவி. இவர் தமிழ், தெலுங்கு, மலையாளம் என கலக்கி வருகிறார்.

கடந்த 2018 ஆம் ஆண்டு தனுஷ் நடிப்பில் வெளியான மாரி 2 படத்தில் சாய் பல்லவி மற்றும் தனுஷ் நடனத்தில் ரவுடி பேபி பாடல் 1 பில்லியன் பார்வையாளர்களை குவித்து சாதனை படைத்தது.

வேலும் சமீபத்தில் வெற்றிமாறன் இயக்கத்தில் இவர் நடிப்பில் Netfilx-ல் வெளியான பாவ கதைகள் மிக சிறந்த விமர்சனங்களை பெற்றிந்தது.

இந்நிலையில் அடுத்ததாக நடிகை சாய் பல்லவியை காலி வெங்கட்டிற்கு ஜோடியாக புதிய படத்தில் நடிக்க அணுகியுள்ளனர். மேலும் இது குறித்து அதிகாரப்பூர்வமான தகவல் வரும் வரை பொறுத்திருந்து பார்ப்போம்.

## சோகத்தில் இருந்த தொகுப்பாளினி பிரியங்கா ரசிகர்களுக்கு ஒரு சந்தோஷ செய்தி

தொகுப்பாளினி பிரியங்கா இந்த துறைக்கு வந்த சிறிது காலங்களிலேயே மக்களிடம் வரவேற்பு பெற்றார். காரணம் அவருக்கு கொடுத்த வேலையை மிகவும் சிறப்பாக செய்தார்.

சிறந்த தொகுப்பாளினி என்பதற்காக விருதுகள் எல்லாம் பெற்றார். இவருக்கு பெரிய ரீச் கொடுத்த நிகழ்ச்சிகளில் ஒன்று சூப்பர் சிங்கர். அண்மையில் தொடங்கப்பட்ட சூப்பர் சிங்கர் நிகழ்ச்சியில் பிரியங்கா இல்லை. வேறு சிலர் தொகுத்து வழங்கினார்கள். இதனால் ரசிகர்கள் வருத்தம் அடைந்தார்கள்.

ஆனால் இனி வரும் சூப்பர் சிங்கர் நிகழ்ச்சியை பிரியங்கா தான் தொகுத்து வழங்க இருக்கிறார்.



## நடிகை ஸ்ருதி ஹாசனின் புதிய காதலன்?

தென்னிந்திய அளவில் முன்னணி கதாநாயகியாக விளங்கி வருபவர்களில் ஒருவர் நடிகை ஸ்ருதி ஹாசன். இவர் தமிழில் ஏ.ஆர்.முருகதாஸ் இயக்கத்தில் வெளியான 7ஆம் அறிவு படத்தின் மூலம் நடிகையாக அறிமுகமானார். நடிகை ஸ்ருதி ஹாசனுக்கு சில வருடங்களுக்கு முன், Santanu என்பவரை மிகவும் நெருக்கமாக காதலித்து வந்தார். ஆனால் எதோ சில காரணங்களால் இருவரும் பிரிந்து விட்டனர்.

இந்நிலையில் நடிகை ஸ்ருதி ஹாசன் தனது புதிய காதலரை அறிமுகம்படுத்தி வைத்துள்ளார். ஆம் தனது 35வது பிறந்தநாளில், தனது புதிய காதலருடன் நெருக்கமாக இருக்கும் புகைப்படத்தை வெளியிட்டுள்ளார்.

தற்போது இணையத்தில் இவர் தான் நடிகை ஸ்ருதி ஹாசனின் புதிய காதலர் என்று பேசி வருகின்றனர். ஆனால் இது குறித்து நடிகை ஸ்ருதி ஹாசனிடம் இருந்து, எந்த ஒரு அதிகாரப்பூர்வ தகவலும் வெளியாகவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.





## சீரியல் ரசிகர்களுக்கு அதிர்ச்சி தகவல் கூறிய நடிகை ராதிகா

தமிழ் சினிமாவில் படங்களை தாண்டி சின்னத்திரை நிகழ்ச்சிகள் தான் அதிகம் மக்களிடம் வரவேற்பு பெறுகின்றன.



தொலைக்காட்சிகளும் மக்களின் ரசனைக்கு ஏற்ப நிகழ்ச்சிகள் புதிது புதிதாக ஒளிபரப்புகிறார்கள். சீரியல்களும் அதிகம் வருகின்றன.

அப்படி சின்னத்திரையிலும் நடித்து, தயாரித்து பல சீரியல்களை கொடுத்து அதில் மிகப்பெரிய வெற்றியும் கண்டவர் நடிகை ராதிகா. அவர் நடிக்கும் சீரியல்கள் இப்போதும் மக்களிடம் பெரிய வரவேற்பை பெறுகின்றன.

தற்போது அவர் ஒரு நிகழ்ச்சியில், சின்னத்திரையில் நடிப்பதை படிப்படியாக குறைத்துக் கொண்டு தனது கணவருடன் அரசியல் பணியில் முழு நேரமும் ஈடுபடுவேன் என கூறியுள்ளார்.




# இயற்கை அழகு குறிப்புகள்

**பால் பவுடர் மற்றும் எலுமிச்சை சாறு**

பால் பவுடரில் எலுமிச்சை சாறு மற்றும் தேன் சேர்த்து பேஸ்ட் செய்து, முகத்தில் தடவி 10 நிமிடம் ஊற வைத்து, பின் முகத்தை கழுவ வேண்டும். இப்படி செய்து வந்தால், முகத்தின் நிறம் அதிகரிப்பதை உங்களால் உணர முடியும்.

**ஒட்ஸ் மற்றும் புளித்த தயிர்**

ஓட்ஸை முதல் நாள் இரவிலேயே ஊற வைத்து, மறுநாள் காலையில் அதனை அரைத்து பேஸ்ட் செய்து, புளித்த தயிர் சேர்த்து கலந்து, முகத்தில் தடவி ஊற வைத்து கழுவ வேண்டும். இப்படி தொடர்ந்து செய்து வந்தால், நல்ல பலனை விரைவில் காணலாம்.

**உருளைக்கிழங்கு**

எலுமிச்சையைப் போலவே, உருளைக்கிழங்கிலும் ப்ளீச்சிங் தன்மை அதிகம் உள்ளது. ஆகவே உருளைக்கிழங்கை பேஸ்ட் செய்து, அதனை தினமும் முகத்தில் தடவி நன்கு ஊற வைத்து கழுவினால், முகம் பொலிவோடு மின்னும்.

**துளசி**

துளசியில் உள்ள ஆன்டி - ஆக்ஸிடன்ட் மற்றும் இதர ஊட்டச்சத்துக்கள், சரும செல்களின் ஆரோக்கியத்தை மேம்படுத்தி, சருமத்தை பொலிவோடும் ஆரோக்கியமாகவும் வைத்துக் கொள்ளும். முக்கியமாக துளசி முகப்பரு பிரச்சனைகளுக்கு நல்ல தீர்வளிக்கும். அதற்கு துளசியை அரைத்து பேஸ்ட் செய்து, முகத்தில் தடவி 15-20 நிமிடம் ஊற வைத்து கழுவ வேண்டும்.

**மஞ்சள் மற்றும் தக்காளி**

மஞ்சள் மற்றும் தக்காளி சாற்றினை ஒன்றாக கலந்து பேஸ்ட் செய்து, முகத்தில் தடவி மாஸ்க் போட்டு வந்தால், அது சருமத்தின் நிறத்தை அதிகரிக்கும்.

**பாதாம் எண்ணெய்**

பாதாம் எண்ணெயை வெதுவெதுப்பாக சூடேற்றி, முகத்தில் தடவி மசாஜ் செய்து நன்கு ஊற வைத்தால், முகத்தில் இரத்த ஓட்டம் அதிகரித்து, முகம் பிரகாசமாக இருக்கும்.

**கடலை மாவு**

கடலை மாவில் மோர் சேர்த்து கலந்து பேஸ்ட் செய்து, முகத்தில் தடவி உலர வைத்து கழுவ வேண்டும். இப்படி அன்றாடம் செய்து வந்தால், சருமத்தின் நிறம் அதிகரிக்கும்.

**புதினா**

புதினாவில் புத்துணர்ச்சியூட்டும் தன்மை அதிகம் உள்ளது. மேலும் சருமத்தில் உள்ள அழுக்குகளை முற்றிலும் வெளியேற்றும் சக்தி உள்ளது. அதற்கு புதினா இலையை அரைத்து சாறு எடுத்து, அதனை முகத்தில் தடவி 10-15 நிமிடம் ஊற வைத்து கழுவ வேண்டும்.

இழுத்து பிடித்து வைக்க
முனைகிறேன்
உன் இதயத்தை என்னுள்
கட்டிப்போட்டு
சிறை வைப்பதல்ல காதல்
விட்டுவிடுகிறேன்
விரும்பி நீயும்
வரும் வரை
காத்திருப்பேன்
காதலுடன்...






# இறால் வடை

**தேவையானப் பொருட்கள்**

**இறால் – 1/4 கிலோ**
**பச்சரிசி ரவை – 2 கப்**
**பச்ச மிளகாய் – 5**
**கறிவேப்பிலை, கொத்தமல்லி**
**மஞ்சள் தூள் – 1 சிட்டிகை**
**கரம் மசாலாத் தூள், இஞ்சி, பூண்டு விழுது – தலா 1 தேக்கரண்டி**
**எண்ணெய் – 1 கப்**
**உப்பு**

**செய்முறை**

இறாலை தோல் உரித்து கழுவி, இரண்டிரண்டாக நறுக்கி அதில் மஞ்சள் தூள், மசாலாத்தூள், இஞ்சி பூண்டு விழுது, தூள் உப்பு அனைத்தையும் போட்டு பிசைந்து கொள்ள வேண்டும்.

பச்சை மிளகாய், கறிவேப்பிலை, கொத்தமல்லியை பொடியாக நறுக்கி இறாலுடன் சேர்க்கவும்.

ஒரு வாணலியில் சிறிது எண்ணெய் விட்டு இறாலை வதக்கவும். நன்கு வதங்கியதும் இறக்கி ஆற விடவும்.




ஒரு பாத்திரத்தில் அரிசி மாவைக் கொட்டி அதில் இறால் வதக்கலை சேர்க்கவும்.

மாவில் தேவையான அளவு உப்பு சேர்த்து சிறிது தண்ணீர் தெளித்து வடை மாவு பதத்திற்கு பிசையவும்.

வாணலியில் 2 கப் எண்ணெய் ஊற்றி காய்ந்ததும் மாவை வடைகளாக தட்டி போட வேண்டும். வடை இரு பக்கமும் நன்கு வெந்து பொன்னிறமானதும் எடுத்து பரிமாறவும்.

தொகுப்பு :- சப்தஹி

# குருந்தூர்மலை விவகாரம்: மறவன்புலவு சச்சிதானந்தம் பொறுப்பற்றவிதத்தில் அறிக்கை விடக்கூடாது - எச்சரிக்கிறார் ரவிகரன்





முல்லைத்தீவு - குருந்தூர்மலையில் உள்ள தமிழ் தெய்வங்கள் காணாமல் ஆக்கப்பட்டுள்ளதோடு, தமிழ் மக்கள் அங்கு வழிபாடுகளை மேற்கொள்ளச் செல்ல முடியாத நிலையே காணப்படுகின்றது. இந் நிலையில் மறவன்புலவு சச்சிதானந்தம் எமது மதத்தின் பெயரால் பொறுப்பான இடத்தில் இருந்துகொண்டு, பொறுப்பற்றவிதத்தில் அறிக்கைகளை வெளியிடக்கூடாதென முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் எச்சரித்துள்ளார்.

குருந்தூர் மலையிலிருந்த சூலம் மற்றும் இந்து மத அடையாளங்கள் அழிக்கப்படவில்லை எனவும், அதே வேளை தமிழ் மக்களின் வழிபாட்டிற்கு அங்கு எவ்வித தடைகளும் இல்லை என கோவில் அறங்காவலர் சபைத் தலைவர் சசிக்குமார் தன்னிடம் தெரிவித்ததாக மறவன்புலவு சச்சிதானந்தம் அண்மையில் அறிக்கை ஒன்றினை வெளியிட்டிருந்தார்.

அந்த வகையில் இவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை மறுத்துள்ள குருந்தூர் மலைக்கோவில் அறங்காவலர் சபைத்தலைவர் சசிக்குமார், முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் அவர்களிடம் இவ்விடயம் தொடர்பில் எழுத்து மூலமான மறுப்பு அறிக்கை ஒன்றினையும் கையளித்துள்ளார். இதனையடுத்து இதுதொடர்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே ரவிகரன் அவர்கள் இவ்வாறு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், குருந்தூர்மலை விவகாரம் தொடர்பில் மறவன்புலவு சச்சிதானந்தம் அவர்கள் ஒரு அறிக்கையினை வெளியிட்டுள்ளார். அவ்வறிக்கையில் குருந்தூர் மலையிலிருந்த சூலம் மற்றும் இந்து மத அடையாளங்கள் அழிக்கப்படவில்லை எனவும், அதே வேளை தமிழ் மக்களின் வழிபாட்டிற்கு அங்கு எவ்வித தடைகளும் இல்லை எனவும் குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

அத்தோடு கோவிலின் அறங்காவலர் சபைத் தலைவர் சசிக்குமார் இத் தகவலை தனக்குத் தெரிவித்ததாகவும், இது தொடர்பாக அறங்காவலர் சபைத் தலைவருடன் தொடர்புகொண்டு விடயங்களை அறிந்துகொள்ளமுடியுமென அறங்காவலர் சபைத் தலைவர் சசிக்குமாரின் தொலைபேசி இலக்கமும் குறித்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது. மறவன்புலவு சச்சிதானந்தம் அவர்களின் இவ்வறிக்கையினைப் பார்த்ததும் எனக்கு வியப்பாக இருந்தது. ஏனெனில் குருந்தூர் மலை தொடர்பான விடயங்களில் அங்குள்ள மக்களுடன் நான் நாளாந்தம் தொடர்புகளைப் பேணிவருகின்றேன். அந்தவகையிலே குருந்தூர்மலையில் இருந்த சூலம் உள்ளிட்ட தமிழ் மக்களின் மத அடையாளங்கள் அழிக்கப்பட்டுள்ளதாகவே அங்குள்ள மக்கள் என்னிடம் தெரியப் படுத்தியிருந்தனர்.

எனவே இவரது இந்த அறிக்கை உண்மைக்குப் புறம்பாக இருப்பதை உணர்ந்து உடனடியாக குமுழமுனைப் பகுதிக்குச் சென்று, அங்குள்ள குருந்தூர் மலை அறங்காவலர் சபைத் தலைவர் உட்பட குருந்தூர் மலை கோவில் நிர்வாகத்தினருடன் கலந்துரையாடிய போது, தாங்கள் அப்படி எதுவும் சொல்லவில்லை என்ற கருத்துப்பட, உடனடியாக எனக்கு எழுத்து மூலமாக அறங்காவலர் சபைத் தலைவர் தனது பெயருடனும், ஐந்தாம் வட்டாரம், குமுழமுனை கிழக்கு, முல்லைத்தீவு என்னும் தனது முகவரியையும் இட்டு, அவரின் கையெழுத்துடன் மறவன்புலவு சச்சிதானந்தம் அவர்களின் இத்தகைய அறிக்கைக்கு மறுப்பறிக்கை ஒன்றை என்னிடம் கையளித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள மறுப்பு அறிக்கையில், குருந்தூர் மலையில் நடைபெற்றது இதுதான், இதுவே உண்மை. கடந்த 2020.03.23ஆம் திகதியன்று குருந்தூர்மலையில் இருந்த முச்சூலம் இனந்தெரியாதவர்களினால் அப்புறப்படுத்தப்பட்டிருந்தது. இதன் பின்பு நாம் வழிபாட்டிற்குச்சென்றபோது சூலம் காட்டிற்குள் வீசப்பட்டிருந்ததை கண்டோம். அச்சூலத்தினை எடுத்து சூலம் இருந்த இடத்தில் மீண்டும் வைத்து வழிபாடுகளை மேற்கொண்டு வந்தோம்.

இந் நிலையில் 18.01.2021 அதாவது இராஜாங்க அமைச்சரும், ஆய்வுக்குழுவினர் குருந்தூர் மலைக்கு வருகை தந்தபோது மீண்டும் அந்த ஆதிசிவனும், முச்சூலமும் திருடப்பட்டோ என்னவோ, விசமிகளால் அப்புறப்படுத்தப்பட்டிருந்தது. மேலும் கடந்த 17.01.2021 அன்று இராஜாங்க அமைச்சர் வருவதற்கு முதல் நாள் ஆலய அறங்காவலர் தலைவராகிய நானே குருந்தூர் மலைக்குப் பொங்கல் பொங்குவதற்காகச் சென்றபோது, அங்கு செல்லவிடாமல் தடுக்கப்பட்டதுடன், படையினரால் திருப்பி அனுப்பப்பட்டேன். இந் நிலையில் மறவன்புலவு சச்சிதானந்தம் என்பவர் என்னால் தெரிவிக்கப்பட்டதாக உண்மைக்குப் புறம்பான தகவல்களையும், எனது தொலைபேசி இலக்கத்தினையும் ஊடகங்களில் தெரியப்படுத்தியுள்ளமை எனக்கு மனவேதனையினையும், கவலையுமளிக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன் எனக்குறித்த மறுப்பறிக்கையில் குருந்தூர் மலை கோவிலின் அறங்காவலர் தலைவர் சசிக்குமார் குறிப்பிட்டுள்ளார்.

இதனூடாக மறவன்புலவு சச்சிதானந்தம் அவர்களுக்கு கூறிக்கொள்ள விரும்புவது என்னவெனில், நிச்சயமாக அவர் இங்கு வருகைதருவாரானால், அங்கு குருந்தூர் மலைக்குச் செல்வதற்கு படையினர் வழிவிட்டால் நாம் அவரை அழைத்துச்சென்று நேரடியாக நிலைமைகளை காண்பிக்க முடியும். அங்கு சிவனும், முச்சூலமும் காணாமல் ஆக்கப்பட்டுள்ளது. அதுதான் உண்மையான நிலைமை. காணாமல் ஆக்கப்படுவது இவர்களுக்குக் கைவந்த கலையாகும். மக்களை காணாமல் ஆக்கியதன் தொடர்ச்சியாக, தற்போது தெய்வங்களையும் காணாமல் ஆக்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன என்பதற்கு இச்சம்பவம் ஒரு ஆதாரமாகும்.

மேலும் அங்கு மக்கள் செல்வதற்குத் தற்போதும் தடைவிதிக்கப்படுகின்றது. இந்த நிலையில் அவரது இத்தகைய கருத்தானது எமக்கு மிகுந்த வேதனையளிக்கின்றது. அவர் காணாத ஒரு விடயத்தினை, அவருக்குத் தெரியாத விடயத்தினைப்பற்றி அவர் ஏன் இவ்வாறு கருத்துத் தெரிவிக்கவேண்டும். யாருக்கு ஆதரவாக இவர் இவ்வாறு கருத்துத் தெரிவிக்கின்றார். எமது மத அடையாளங்களை அழிக்கும், அழிக்க முற்படுகின்ற தரப்புகளுக்காக ஆதரவாக கருத்துத் தெரிவிக்கின்றார். நாம் இந்த இடத்திலே இருந்து கொண்டிருக்கின்றோம். நிச்சயமாக அவருடைய கருத்துக்கள்பொய்யானவை. எனவே இவ்வாறான தவறான தகவல்களைப் பரப்பவேண்டாம். அதேவேளை அவருடைய அறிக்கையில் பேராதனைபல்கலைக்கழகமாணவர்கள் வருகைதந்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அவருடைய இத்தகைய கருத்தையும் எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது. ஏன் எனில் நீதிமன்றத் தீர்ப்பின்படி யாழ் பல்கலைக்கழக தொல்லியல்துறை மாணவர்களை அழைத்தே ஆய்வுகளை மேற்கொள்ளவேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளதே தவிர பேராதனைப் பல்கலைக்கழக மாணவர்களை அழைத்து ஆய்வுகளை மேற்கொள்ளுமாறு சொல்லப்படவில்லை.

கடந்த 18.01.2021அன்று இராஜாங்க அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க வருகை தந்தபோது இராணுவத்தின் கொடிகள்அங்கேபறக்கவிடப்பட்டிருந்தன. அன்றைய தினம் இராணுவ ஆதிக்கத்தோடு தான் அந்த நிகழ்வுகள் இடம்பெற்றிருந்தன. அவ்வாறு இராணுவ ஆதிக்கத்துடன் குருந்தூர்மலைப் பகுதியில் நிகழ்வுகளை மேற்கொள்ளக்கூடிய வகையில் நீதிமன்றக் கட்டளைகள் இருக்கவில்லை.

அங்குள்ள பல மரங்கள் வெட்டப்பட்டுக் காணப்படுகின்றன. மரங்களை வெட்டக்கூடாதென அரசு அறிவித்தல்களை வெளியிடுகின்றது. ஆனால் படைகள் மரங்களை வெட்டுகின்ற நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். குறிப்பாக செங்கற்கள் உட்பட பல கட்டுமானப் பொருட்களையும் அங்கு காணக்கூடியதாகவிருந்தது. ஆய்வுப் பணிகள் தான் மேற்கொள்வதாகவிருந்தால், அங்கு கட்டுமானப் பொருட்கள் பல கொண்டு செல்லப்பட்டதற்கான காரணம் என்ன? இவ்வாறாக பல பொருத்தமற்ற செயற்பாடுகள் இடம்பெற்றிருக்கின்றன. மேலும் எமது மதத்தின் பெயரால் பொறுப்பான பதவிகளில் இருந்துகொண்டு, பொறுப்பற்ற விதமாக அறிக்கைகளை விடுவதை மறவன்புலவு சச்சிதானந்தம் அவர்கள் நிறுத்திக்கொள்ளவேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.



# முஸ்லீம்களின் ஜனாசா எரிப்பு விவகாரத்தில் வெள்ளைக்கொடி பிடிக்கும் சாணக்கியன்


## கிழக்கு மாகாண மட்டக்களப்பு மாவட்டத்தின் பாராளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் அவர்களுடனான சிறப்பு நேர்காணல்

கடந்தவார தொடர்ச்சி...

ஜனாசா விடயத்தில் மாத்திரமல்ல, பாராளுமன்ற உறுப்பினர் முஷாரப் அவர்களுடைய தேர்தல் மேடைகளைப் பார்க்கின்றபோது மஹிந்த ராஜபக்சவுக்கு எதிராக அவருடைய பேச்சுக்கள் இருந்தது. அதற்குத் தான் மக்கள் வாக்களித்தார்கள். அவர் 20ம் திருத்தத்திற்கும் வாக்களித்தார். பின்னர் தனது நிலைப்பாட்டை மாற்றிக்கொண்டார். மக்களுக்கு கூறியதற்கும் எல்லோரையும் எந்த நாளும் முட்டாளாக்க முடியாது. தற்போது நாட்டில் நடக்கக்கூடிய சம்பவங்களை வைத்து நான் நினைக்கிறேன் இஸ்லாமிய நாடுகளின் நிலைப்பாடுகள் மாறியிருக்கும். அது மாறியிருக்காவிட்டாலும் கூட, அந்த மாற்றத்தை நாங்கள் அவர்களிடம் எதிர்பார்க்கவேண்டும். அப்படியில்லாவிட்டால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடு என்ன? எங்களுக்கு சமஸ்டி முறையான தீர்வு வேண்டும். அது வடகிழக்கு இணைந்த ஓர் தீர்வாக இருந்தால் நாங்கள் அதை விரும்புவோம். இதைக் கூறித்தான் நாம் வாக்குக் கேட்டோமே தவிர வேறெதையும் கூறவில்லை. இவற்றை அடைய வேண்டுமாகவிருந்தால் சிறுபான்மை இனங்களினுடைய ஆதரவு அவசியம். இது தான் என்னுடைய நிலைப்பாடும் கூட. கடந்த காலங்களில் நடந்ததைப் பற்றி ஆராய முற்பட்டால் இன்னும் 30 வருடங்களில் 2020ஆம் ஆண்டைப்பற்றி ஆராய்ந்து கொண்டிருப்போம். நல்ல வாய்ப்பினை தவறவிட்டுவிட்டோம். வடகிழக்கு இணைந்த தமிழர் தாயகத்தை நாம் பெற்றிருக்கலாம் என 2050ஆம் ஆண்டில் கூறிக் கொண்டிருக்க நான் தயாராக இல்லை. நானும் என்னாலான வேலைகளைச் செய்ய தயாராக இருக்கிறேன். இதுதான் எனது நிலைப்பாடு.

**கேள்வி : கடந்த காலங்களில் தீர்வுத்திட்டங்கள் என்கிற விடயங்களில் குழப்புகின்ற விதத்தில் தான் முஸ்லீம் தலைமைகள் செயற்பட்டார்கள். தற்போது வடகிழக்கில் வாழக்கூடிய முஸ்லீம்களை தமிழ் மக்களுடன் இணைக்க முடியும் என்கிற நம்பிக்கை உங்களுக்கு எவ்வாறு வந்தது?**

**பதில்** : நம்பிக்கை தான் வாழ்க்கை. நம்பிக்கையில் தான் நானும் வெற்றி பெற்றேன். எமது மாவட்டத்திலேயே எமது கட்சியில் உள்ளவர்களே என்னை விமர்சித்தார்கள். ஆதாரங்களும் இருக்கிறது. நான் அதையெல்லாம் மறந்து கடந்து வந்துவிட்டேன். ஒஸ்லோ பேச்சுக்கள் நடந்து 19 வருடங்களைக்கடந்துவிட்டது.நாம் இப்போது 2021இல் இருக்கிறோம். மீண்டும் மீண்டும் அப்படி நடந்தது இப்படி நடந்தது என்று இப்போது நான் சிந்திக்கவில்லை. நான் 2001 இனை பற்றிச் சிந்திக்காமல் 2050 இனை பற்றித் தான் சிந்திக்கிறேன். சாணக்கியன் ஒரு தனிப் பாராளுமன்ற உறுப்பினர் என்பதை விட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடும் இரு இனங்களும் இணைந்து வாழ்ந்தால் தான் தீர்வினைப் பெறலாம் என்பதுதான். அப்படியில்லாமல் ஒரு தீர்வினைப் பெறலாம் என்று சொல்ல முடியாது. அப்படிக் கூறுவதாகவிருந்தால் அதனை ஏற்றுக்கொள்ள முடியாது அது நடக்காது. வடக்கினை வேறாகவும் கிழக்கினை வேறாகவும் பிரிக்கக்கூடாது. வடகிழக்கு எமது தாயகம் என்றால் அதனை அடைவதற்கான வழிகளை நாங்கள் பார்க்கவேண்டும். அப்படியில்லாவிட்டால் நாம் அதனைக் கைவிட்டுவிட்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் இல்லாமலாக்கப்பட்டு இந்த நாடு சிங்கள பௌத்த நாடு. நாம் அவர்களுக்கு அடிமைகளாகவே வாழ்வோம் என்கிற நிலைக்கு மக்கள் வந்தார்கள் என்றால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு பாராளுமன்ற உறுப்பினர்கள் இல்லாதிருக்கும். சிங்கள பேரினவாதிகளின் பேச்சைக்கேட்டு தமிழ் மக்கள் வாக்களிப்பார்களாகவிருந்தால் அவர்கள் தமது பைகளை நிரப்பிக்கொண்டு சொகுசாக வாழ்வார்கள். அமைச்சுப் பதவிகளைப் பெற்றுக்கொண்டு சந்தோசமாக வாழ்வார்கள். காணிகள் அனைத்தும் பறிபோகும். தமிழ் மக்கள் தொடர்ச்சியாக அடிமைகளாக வாழ்வார்கள். கரையோரப் பகுதிகளில் சிங்களவர்கள் வாழ்ந்த இடம் என்று கூறி சிங்களக் குடியேற்றங்கள் கூட வரலாம். தமிழ் – சிங்கள மக்கள் இதைத் தான் விரும்புகிறார்கள் என்றால், 2001 ஆம் ஆண்டு இப்படி நடந்தது ஆகவே நாம் 2021இல் இப்படிச் செய்யப்போகிறோம். எமது கரையோரப் பிரதேசங்களில் சிங்களவர்கள் குடியேறட்டும் என்று இரு இனத்தவர்களும் சொல்வார்களா?



**கேள்வி : பிள்ளையான் போன்றவர்களை பயங்கரவாத தடைச்சட்டத்தில் கைது செய்து பின்னர் விடுதலை செய்திருக்கிறார்கள். இந்த சம்பவங்களை எவ்வாறு பார்க்கிறீர்கள்?**

**பதில்** : உண்மையில் இனத்துக்காக போராடி பயங்கரவாத தடைச்சட்டத்தில் கைது செய்யப்பட்டு பல வருடங்களாக சிறைகளில் வாடுகின்ற தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்யாமல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரின் கொலைக் குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டு பின்னர் விடுதலை செய்தமையை நியாயப்படுத்த முடியாது. மக்கள் இதனை சிந்திக்கவேண்டும். பிள்ளையான் கூட தன்னை விடுதலை செய்யும் போது இவர்களையும் விடுதலை செய்யுமாறு கோரிக்கையினை விடுத்திருக்கலாம். மஹிந்த ராஜபக்சவுக்காக போராடியவரைப் போலல்லாமல் உண்மையாகவே போராடியவர்கள் இருக்கிறார்கள். அவர்களையும் விடுதலை செய்யுங்கள்எனக்கூறியிருக்கலாம். ஒரு பத்துப் பேரையாவது முதலில் விடுதலை செய்யக் கோரியிருக்கலாம். அப்படி அவர் செய்யவில்லை. தன்னுடைய தேர்தல் பிரச்சாரங்களில் கூட கைவிலங்கினை உடைத்து வெளியே வருவார் என்று கூட சுவரொட்டிகள் ஒட்டப்பட்டது.

விலங்குகளைஉடைத்துஅண்ணன் வெளியில் வருவார் என்றால் அண்ணன் சிறைக்கு சென்றது எதற்காக? தேசியத்திற்காக போராடியா? அண்ணன் ஒரு பாராளுமன்ற உறுப்பினரை கொலை செய்த குற்றச்சாட்டின் அடிப்படையில் தான் சென்றார். இன்று மக்கள் அவருக்கு வாக்களித்து பாராளுமன்றம் அனுப்பியிருக்கிறார்கள் என்றால் மக்கள் சிறைக்கு செல்வதையும் ஒரு தகுதியாகப் பார்க்கிறார்களா என்கிற கேள்வி எழுகிறது. தேர்தல் காலங்களில் நிறைய பொய்கள் சொல்லப்பட்டது. கிழக்கு மாகாண சபைத் தேர்தலைப் பற்றி நாங்கள் நிறையக் கதைத்துவிட்டோம். நான் நினைக்கிறேன் மட்டக்களப்பில் 304 வேட்பாளர்கள் என்று. அதில் தமிழ் 200 என்று பார்த்தாலும் அதில் 198 வேட்பாளர்கள் அரசியல் மேடைகளில்கூறியதுஒருவிடயத்தைத்தான். 11 ஆசனங்களைப் பெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 07 ஆசனங்களைப் பெற்ற முஸ்லீம்களுக்கு கிழக்கு மாகாண சபையினைக் கொடுத்தது என்று. அது முற்றுமுழுதாகப் பொய். அதைச் சொல்பவர்களுக்கு கிழக்கு மாகாண சபையினது மொத்த ஆசனங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பது கூடத் தெரியாது. இவ்வாறான போலியான பிரச்சாரங்கள் நிறைய நடந்தது.

அதேநேரத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ன செய்தது என்கிற கேள்வியையும் எழுப்பினார்கள். உண்மையிலேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மட்டக்களப்பு மாவட்டத்தில் என்ன செய்தது என்று மக்கள் இன்று உணர்ந்திருக்கிறார்கள். இன்று மகிலந்தமடு மாதவணையில், வெருகலில் காணி அபகரிப்புக்கள் நடக்கிறது. அம்பாறையில், வவுணதீவில் காணி அபகரிப்பு நடக்கிறது. இதெல்லாம் மேய்ச்சல் தரை. அதைவிட தொல்பொருள் திணைக்களம் என்கிற பெயரில் காணிகள் அபகரிக்கப்படுகிறது. அதைவிட தற்போது காணி இல்லாதவர்களுக்கு காணி வழங்குவதாக புதிதாக ஒரு திட்டம் போட்டிருக்கிறார்கள். கொழும்பில் இரண்டு இலட்சத்திற்கு மேற்பட்டவர்கள் காணி வேண்டும் என்று விண்ணப்பம் செய்திருக்கிறார்கள். ஆகவே அவர்களுக்கு கொழும்பில் காணிகள் வழங்க அரச காணிகள் இல்லை. எனவே அவர்களுக்கான காணிகள் வடகிழக்கில் இருந்துதான் வழங்கப்படப்போகிறது. மகாவலி அபிவிருத்தி அதிகார சபையின் ஊடாக இவ்வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படும். எங்களுடைய காணிகளை பறிக்கப்போகிறார்கள். நாங்கள் இவ்வாறான விடயங்கள் எல்லாம் நடக்கும் என மக்களுக்குச் சொன்னபோதும் கூட இதையெல்லாம் தடுத்த வேலையைத் தான் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு செய்தது. அபிவிருத்தி என்கிறபோது கம்பெரலியவில் 60 கோடி என நினைக்கிறேன். தற்போது ஒரு வருடத்திற்கு ஒரு இராஜாங்க அமைச்சருக்கு 400 மில்லியன் வழங்குகிறார்கள். வெறுமனே கம்பெரலியவின் ஊடாக 600 மில்லியனைப் பெற்று அபிவிருத்திகளை செய்திருக்கிறார்கள் பாராளுமன்ற உறுப்பினர்கள். ஐக்கிய தேசியக் கட்சி அரசுக்கு முண்டுகொடுப்பதாக குற்றஞ்சாட்டினார்கள். அதெல்லாம் பொய். இவ்வாறான பொய்யான விடயங்களைக் கூறித்தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எதிராக பிரச்சாரங்களைச் செய்தார்கள்.

ஆனால் மக்கள் பொய்களை நம்புவது இலகுவான விடயம். என்னைப்பற்றி திருமண விடயம் பற்றிக் கூட கூறினார்கள். இதனைப் பார்த்தவர்களுக்கு என்னடா இவர் இப்படியா என்கிற சந்தேகம் நிச்சயமாக வந்திருக்கும். அது இயல்பு. சாணக்கியன் இப்படி இருக்கலாம் என தொடர்ச்சியாக கூறுகின்றபோது பொய் உண்மையாக மாறும்.

தொடரும்...

நேர்காணல் – இரணியன்




## சீனாவின் புதிய விண்வெளி திட்டங்கள்!

அமெரிக்காவை விண்வெளியில் தோற்கடிக்கும் நோக்கத்துடன், 2021க்கான திட்டங்களை சீன விண்வெளி அமைப்பு அறிவித்துள்ளது. ஒரு பெரிய விண்வெளி ஆய்வகத்தை உருவாக்குவது அதன் முதல் திட்டம்.அடுத்து, சீனர்களை அடிக்கடி அந்த ஆய்வகத்திற்கு அனுப்பி, திரும்ப பூமிக்கு அழைத்து வருவதும், சக்தி வாய்ந்த விண்வெளி தொலை நோக்கி ஒன்றை நிறுவுவதும் சீனாவின் பிற திட்டங்கள்.

சீனாவின் விண்வெளி ஆய்வகம், மூன்று பகுதிகளைக் கொண்டது. இதன் முதல் பகுதியை, சீனாவின் கனரக ராக்கெட்டான 'லாங் மார்ச் 5பி', வரும் 2021 மே மாதத்திற்குள் விண்வெளிக்கு சுமந்து செல்லும். இந்த ராக்கெட்டின் எடை 22 டன்கள் என்பது குறிப்பிடத்தக்கது.மொத்தம் 11 ராக்கெட்களை அடுத்தடுத்து ஏவுவதன் மூலம், சீனா தனது விண்வெளி ஆய்வகத் திட்டத்தை நிறைவேற்றவிருக்கிறது. அதே ராக்கெட்கள் மூலம் மனிதர்களையும் ஆய்வகத்திற்கு அனுப்பவும், திருப்பி பூமிக்கு அழைத்து வரவும் சீன விஞ்ஞானிகள் திட்டமிட்டு வருகின்றனர்.

அது மட்டுமல்ல, 2022 வாக்கில், ஹப்பிள் தொலைநோக்கி போல, 'சுன்டியான்' என்ற சக்தி வாய்ந்த தொலைநோக்கியையும், சீனா விண்ணில் நிலை நிறுத்தவிருக்கிறது.




## மின்னும் கருந்துளை!

விண்வெளியில் கருந்துளைகளைப் பற்றிய ஒரு புது கண்டுபிடிப்பு ஆச்சரியமூட்டுகிறது. கருந்துளைகள், அவற்றின் பெயருக்கு நேர்மாறாக, அவ்வப்போது ஒளியை வெளிப்படுத்துவதுண்டு. குறிப்பாக, அவை நட்சத்திரங்களை கபளீகரம் செய்யும்போது பிரகாசமான ஒளி வெளிப்படும். இதுபோன்ற, 'தரமான சம்பவம்' மிக அரிதாகவே அரங்கேறும்.

ஆனால், அண்மையில், ஒரு கருந்துளை, 114 நாட்களுக்கு ஒரு முறை, அதிக வெளிச்சத்தை உமிழ்வதை விஞ்ஞானிகள் உறுதி செய்துள்ளனர். பூமியிலிருந்து, 570 மில்லியன் ஒளியாண்டு தொலைவில், இந்த அதிசயம் நிகழ்வதை விண்வெளி விஞ்ஞானிகள், 2014 நவம்பரிலேயே கண்டறிந்தனர்.

ஆனால், 'அசாஸ்ன்-14கேஒ' என்று பெயரிடப்பட்டுள்ள அந்த கருந்துளை, குறிப்பிட்ட நாட்கள் இடைவெளியில் ஒளியை உமிழ்கிறதா என்பதை, 2020ஆம் ஆண்டு முழுதும் விஞ்ஞானிகள் கண்காணித்தனர். அவர்கள் எதிர்பார்த்த படியே மே 17, செப்டம்பர் 7 மற்றும் டிசம்பர் 26 என்று சரியாக, 114 நாட்கள் இடைவெளிகளில் அசாஸ்ன் கருந்துளையிலிருந்து ஒளி வெளிப்பட்டது. இந்த ஆய்வு முடிவுகள், 'அஸ்ட்ரோ பிசிகல் ஜர்னல்' இதழில் வெளியிடப்பட்டு உள்ளது.



## ஆய்வகத்தில் வளர்ந்த மாட்டிறைச்சி!

ஆராய்ச்சிக்கூடத்தில் இறைச்சியை உருவாக்கும் தொழில்நுட்பம் கொதிநிலையை அடைந்திருக்கிறது. இஸ்ரேலைச் சேர்ந்த 'அலேப் பார்ம்ஸ்', மாட்டு இறைச்சியின் உயிருள்ள செல்களை மட்டும் எடுத்து, ஆய்வகத்தில் வளர்க்கும், 'பயோ பார்ம்' தொழில்நுட்பத்தை படைத்துள்ளது.

ஒப்பந்தம்இத் தொழில்நுட்பத்தை பயன்படுத்தி, நேரடியாகவே மாட்டு இறைச்சியை பெரிய உயிரிக் கலன்களில் வளர்க்க முடியும். அலேப் பார்ம்சின் உயரதிகாரிகள், அண்மையில், ஜப்பானிலுள்ள மிட்சுபிசி குழுமத்தின் உணவுப் பிரிவுடன் கூட்டுறவு ஒப்பந்தம் போட்டு உள்ளனர்.

இதன் மூலம், மாட்டு இறைச்சிப் பிரியர்களான ஜப்பானியர்களுக்கு விரைவில், ஆய்வகத்தில் வளர்த்த மாட்டிறைச்சி கிடைக்கப்போகிறது.அலேப்பின் 'பயோ பார்ம்' தொழில்நுட்பத்தை வைத்து, மிட்சுபிசி தனது புதிய தொழிற்சாலையில் மாட்டிறைச்சியை உருவாக்கி, ஜப்பான் முழுவதும் விற்பனை செய்யவிருக்கிறது.

ஆய்வக இறைச்சி, அசல் மாட்டிறைச்சியைவிட சற்றே விலை கூடுதலாகவே இருக்கும். சுற்றுச்சூழல் கேடுஆனால், அடுத்த சில ஆண்டுகளில் ஆய்வக இறைச்சியின் விலை இறங்கிவிடும் என அலேப் பார்ம்ஸ் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். ஆனால், மாட்டுப் பண்ணைகளால் ஏற்படும் சுற்றுச்சூழல் கேடுகள் எதுவும் ஆய்வக மாட்டிறைச்சியை உருவாக்கும்போது ஏற்படாது. எனவே, ஜப்பானில், சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் முதலில் அலேப் பார்ம்சின் ஆய்வக மாட்டிறைச்சிக்கு ஆதரவு தருவர் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



## வேகமெடுக்கும் பூமி!

கடந்த 2020 உலகத்தை கலக்கிவிட்டுச் சென்றது. அதே ஆண்டில், இன்னொரு பூமிக் கலக்கலும் நடந்தேறியுள்ளது. அதாவது, பூமி தன்னைத் தானே சுற்றும் வேகம் சற்றே அதிகரித்துள்ளது.

அதிகமில்லை, பூமியின் சுழற்சி வேகம் அதிகரித்திருப்பது, ஒரே ஒரு நொடி கூடுதல்தான். எனவே, உலக நேரத்தை கணக்கிடும் அணுக் கடிகாரத்தில், ஒரு நொடியை கழித்து ஓடவைக்கவேண்டும் என விஞ்ஞானிகள் கணித்துள்ளனர்.

கடல் அலைகள், காற்று வீசும் வேகம், பூமியின் மையத்தில் அலைபாயும் எரிமலைக் குழம்பு என்று பல காரணிகளால் பூமியின் சுழற்சி வேகம் சற்றே மாறுபடுவதுண்டு. வழக்கமாக, இந்த இயற்கைக் காரணிகளால் வேகம் குறையும். ஆனால், 2020ல் வேகம் சற்றே கூடியுள்ளது என்பதுதான் விந்தை.



# விளையாட்டு செய்திகள்

## கொரோனா விதிமுறையை மீறினாரா காற்பந்து வீரர் ரொனால்டோ?

காற்பந்து போட்டி தொடரில் பங்கேற்று விளையாடி வரும் ரொனால்டோ, கொரோனா கட்டுப்பாட்டு விதிமுறையை மீறியதாக தகவல் வெளியாகியுள்ளது.

உலகின் முன்னணி காற்பந்து வீரரான கிறிஸ்டினா ரொனால்டோ இத்தாலியின் யுவண்டஸ்(Juventus) கிளப் அணியில் தற்போது விளையாடி வருகிறார்.

இந் நிலையில் குறித்த காற்பந்து போட்டி தொடரில் பங்கேற்று விளையாடி வரும் ரொனால்டோ, கொரோனா கட்டுப்பாட்டு விதிமுறையை மீறியதாக தகவல் வெளியாகி இருக்கிறது.

அவர் தனது காதலி ரோட்ரிக் பிறந்த நாளுக்காக துரின் நகரிலிருந்து 150 கிலோ மீற்றர் பயணம் செய்து கோர் மேயுர் பகுதிக்கு சென்றுள்ளார் என்று அந் நாட்டு ஊடகங்களில் செய்திகள் தெரிவித்துள்ளன.

தற்போது இத்தாலியில் விதிக்கப்பட்டுள்ள கொரோனா கட்டுபாடுகள் பற்றி துரின் நகரில் இருந்து ஜோடியாக வெளியேற கூடாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அதை ரொனால்டோ மீறியதாக தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.




## கோபா டெல் ரே காற்பந்துத் தொடர் காலிறுதிக்கு பார்சிலோனா அணி முன்னேற்றம்!

கோபா டெல் ரே (Copa del Rey) காற்பந்து தொடரின் காலிறுதிக்கு மெஸ்சியின் பார்சிலோனா அணி முன்னேறியுள்ளது.

ஸ்பெயினில், உள்ளூர் கிளப் அணிகள் பங்கேற்கும் கோபா டெல் ரே' காற்பந்துத் தொடர் நடக்கிறது. இதன் '16 சுற்றுப்' போட்டியில் பார்சிலோனா, ரே வாலேகனோ அணிகள் மோதின.

அபாரமாக ஆடிய பார்சிலோனா அணி 2-1 என்ற கணக்கில் வெற்றி பெற்று காலிறுதிக்குள் நுழைந்தது. பார்சிலோனா சார்பில் மெஸ்சி (70வது நிமிடம்), டி ஜோங் (80வது) தலா ஒரு கோலடித்தனர். வாலேகனோ அணிக்கு கார்சியா (63வது நிமிடம்) ஆறுதல் அளித்தார்.

மற்றொரு போட்டியில் செவில்லா அணி 3-0 என்ற கோல் கணக்கில் வாலன்சியா அணியை வீழ்த்தி காலிறுதிக்கு தகுதி பெற்றது. அல்மேரியா அணி 5-4 என்ற கணக்கில் - பெனால்டி ஷுட் அவுட்' முறையில் ஒசாசுனா அணியை வென்றது.



## 14வது ஐபிஎல் தொடருக்கான வீரர்களின் ஏலம் நடைபெறும் திகதி அறிவிப்பு!

14ஆவது ஐபிஎல் தொடருக்கான வீரர்களின் ஏலம் சென்னையில் பெப்ரவரி மாதம் 18ஆம் திகதி நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனாத் தொற்றுப் பரவல் காரணமாக கடந்த ஆண்டு ஐபிஎல் போட்டிகள் ஐக்கிய அரபு இராச்சியத்தில் நடைபெற்ற நிலையில், 14வது தொடர் வரும் ஏப்ரல், மே மாதங்களில் இந்தியாவில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இந்நிலையில் ஐ.பி.எல். போட்டிக்கான வீரர்கள் ஏலம் சென்னையில் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



## கங்குலியின் உடல் நிலை சீராக உள்ளது

பிசிசிஐ தலைவர் கங்குலியின் உடல் நிலை சீராகவுள்ளதாக வைத்தியசாலை நிர்வாகம் தெரிவித்துள்ளது.

இந்திய கிரிக்கெட் சபையின் தலைவரும், இந்திய அணியின் முன்னாள் தலைவருமான சௌரவ் கங்குலிக்கு கடந்த 2ஆம் திகதி திடீரென மாரடைப்பு ஏற்பட்டது.

இதையடுத்து உடனடியாக கொல்கத்தாவிலுள்ள தனியார் வைத்தியசாலையில் தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டார்.

இதன்போது அவருக்கு இதயத்துக்கு செல்லும் ரத்தக்குழாயில் 3 அடைப்பு இருப்பது தெரியவந்ததால் அவருக்கு ஆஞ்சியோ பிளாஸ்டி சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.

இதனையடுத்து 5 நாட்கள் சிகிச்சை எடுத்துக் கொண்டதன் பின்னர் அவர் வீடு திரும்பினார். இந் நிலையில் கங்குலியை மீண்டும் அவசரமாக வைத்தியசாலைக்கு அழைத்து சென்றதால் பரபரப்பு உண்டானது.

அவருக்கு மறுபடியும் லேசான நெஞ்சு வலி ஏற்பட்டதாக தகவல்கள் பரவின. ஆனால் அவர் தனது இதயம் செயற்பாடு தொடர்பாக பரிசோதித்துக் கொள்ள வந்ததாகவும், அவரது உடல்நிலை சீராக இருப்பதாகவும் வைத்தியசாலை நிர்வாகம் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது



# உலக செய்திகள்

## போலாந்தில் கருக்கலைப்பு தடை சட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆயிரக்கணக்கானோர் போராட்டம்!

போலாந்தில் கருக்கலைப்புக்கு தடை விதிக்கும் வகையிலான சட்டம் அமுலுக்கு வருவதாக அறிவிக்கப்பட்டதையடுத்து. அந் நாட்டில் ஆயிரக்கணக்கானோர் போராட்டத்தில் ஈடுபட்டனர். இச் சட்டம் அமுலுக்கு வருவதன் மூலம். பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப்படும் பெண்கள் மற்றும் முறையற்ற பாலியல் உறவுகளில் ஈடுபடுபவர்களுக்கு மாத்திரமே கருக்கலைப்பு செய்யப்படும் எனக் கூறப்படுகின்றது.

இதனால். இச் சட்டத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து மத்திய வார்ஷா( Warsaw )பகுதியில் ஆயிரக்கணக்கானோர் கறுப்பு ஆடைகள் அணிந்தும். கறுப்பு கொடிகளை ஏந்தியும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.




## விவசாயிகள் தொடர் போராட்டம்– டெல்லி எல்லைகள் மூடப்பட்டன!

விவசாயிகளின் தொடர் போராட்டம் காரணமாக டெல்லி எல்லைகள் மூடப்பட்டு. பாதுகாப்புக்கு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. இந்தியாவில் வேளாண் சட்டங்களை திரும்ப பெற வலியுறுத்தி விவசாயிகள் 2 மாதங்களுக்கும் மேலாக போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

அரசுடன் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைகள் தொடர்ந்து தோல்வியை சந்தித்த சூழலில். குடியரசு தினத்தன்று டெல்லிக்குள் ட்ரக்டர் பேரணி நடத்தப்பட்டபோது இதில் கடும் வன்முறை வெடித்தது. விவசாயிகளில் ஒரு தரப்பினர் பொலிஸாரால் அனுமதிக்கப்பட்ட பாதைகளை மீறி தடுப்புகளை உடைத்து கொண்டு முன்னேறினர்.

அதன்பின்னர் விவசாயிகள் தங்கள் அமைப்பின் கொடியை செங்கோட்டையில் ஏற்றினர். இதன் போது பொலிஸாருக்கும். விவசாயிகளுக்கும் இடையே மோதல் ஏற்பட்டது. இம் மோதலில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் பலர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந் நிலையில் பாராளுமன்றின் வரவு செலவு கூட்டத்தொடர் தொடங்கவுள்ளதால் எல்லைப்பகுதிகளில் பாதுகாப்பு மேலும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

விவசாயிகள் போராட்டம் காரணமாக காசிப்பூர். சிங்கு. ஆச்சந்தி. மங்கேஷ். சபோலி. பியாவ் மன்யாரி எல்லைகள் மூடப்பட்டன. போராட்டத்தில் வன்முறை ஏற்பட்டு விடாமல் தடுப்பதற்காக பொலிஸார் அதிக அளவில் எல்லை பகுதிகளில் பாதுகாப்பு பணிகளுக்காக குவிக்கப்பட்டுள்ளனர்.








## கொவிட்-19: பிரித்தானியாவில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 1 லட்சத்தைக் கடந்தது!

பிரித்தானியாவில் கொரோனாத் தொற்றினால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை ஒரு லட்சத்தைக் கடந்துள்ள நிலையில் இதற்கு முழு பொறுப்பையும் தானே ஏற்பதாக அந்நாட்டுப் பிரதமர் போரிஸ் ஜோன்சன் அறிவித்துள்ளார். உலகளவில் கொரோனாத் தொற்றுப் பரவலானது கடந்த சில மாதங்களாக மீண்டும் அதிகரிக்கத் தொடங்கியுள்ளது. அந்தவகையில் அமெரிக்கா. பிரித்தானியா போன்ற நாடுகளில் கொரோனாத் தொற்று காரணமாகப் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையும் தொடர்ந்து அதிகரித்தவாறு காணப்படுகின்றது.

மேலும் கடந்த ஒக்டோபர்-நவம்பர் காலத்தில் லண்டன் பகுதியில் ஆராய்ச்சியாளர்கள் நடத்திய ஆய்வில் உருமாறிய கொரோனாத் தொற்று ஏற்பட்டிருப்பதைக் கண்டறிந்தனர். இவ் உருமாறிய கொரோனாத் தொற்றானது அதிக பாதிப்பை ஏற்படுத்தாது என்றாலும்கூட இது மற்ற வகைகளை விட 70% வரை வேகமாகப் பரவும் என்றும் ஆராய்ச்சியாளர்கள் எச்சரித்தனர். இதையடுத்து. கடந்த சில வாரங்களாகவே கொரோனாத் தொற்றுப் பரவல் பிரித்தானியாவில் அதிகரித்துள்ளது. குறிப்பாக உயிரிழப்புகளும் ஒரு லட்சத்தை கடந்துள்ளது.

இந்நிலையில் இது குறித்து செய்தியாளர்களிடம் பேசிய பிரித்தானிய பிரதமர் போரிஸ் ஜோன்சன். "தற்போது நாம் இழந்துள்ள ஒவ்வொரு உயிருக்காகவும் நான் வருந்துகிறேன். ஒரு பிர தமராக இந்த அரசு எடுத்து அனைத்திற்கும் நான் முழு பொறுப்பையும் ஏற்றுக்கொள்கிறேன்" இவ்வாறு தெரிவித்துள்ளார்.




## அணுசக்தி ஒப்பந்த நிபந்தனைகளை ஈரான் பின்பற்றினால் தங்கள் நாடு மீண்டும் ஒப்பந்தத்தில் இணையும்! –அமெரிக்கா

அணுசக்தி ஒப்பந்த நிபந்தனைகளை ஈரான் பின்பற்றினால் மாத்திரமே அந்த ஒப்பந்தத்தில் தங்கள் நாடு மீண்டும் இணையும் என்று அமெரிக்கா தெரிவித்துள்ளது. ஈரான் கடந்த 2015ஆம் ஆண்டு. சீனா. பிரான்ஸ். ரஷ்யா. பிரித்தானியா. அமெரிக்கா. ஜேர்மனி ஆகிய 6 நாடுகளுடனும். ஐரோப்பிய கூட்டமைப்புடனும் அணுசக்தி தவிர்ப்பு ஒப்பந்தம் ஒன்றை ஏற்படுத்தியிருந்தது.

இவ் ஒப்பந்தத்தின் மூலம் ஈரானின் செறிவூட்டப்பட்ட யுரேனியம் கையிருப்பை 98 சதவீதம் குறைக்கவும். ஈரான் அணுசக்தி நிலையங்களை சர்வதேச அணுசக்தி நிறுவனம் பார்வையிடவும். பதிலுக்கு ஈரான் மீது அமெரிக்கா. ஐரோப்பிய கூட்டமைப்பு. ஐ.நா. பாதுகாப்புச் சபை ஆகியோர் விதித்த பொருளாதார தடைகளில் இருந்து நிவாரணம் வழங்கவும் வகை செய்தது. எனினும் இவ் உடன்படிக்கையிலிருந்து அமெரிக்கா 2018ஆம் ஆண்டு விலகி. ஈரான் மீது பொருளாதார தடைகளை விதித்தது. இதனால் ஈரானும் பதிலுக்கு ஒப்பந்தத்தின் விதி முறைகளை மீறியது.

இதனையடுத்து இரு நாடுகளுக்கும் இடையில் மோதல் போக்குக் காணப்பட்டது. இந்நிலையில் தற்போது ஜோ பைடன் நிர்வாகம் ஆட்சி அதிகாரத்துக்கு வந்துள்ளது. அந்தவகையில் அமெரிக்காவின் புதிய வெளியுறவு அமைச்சரான ஆண்டனி பிளிங்கன்(Antony Blinken) இது குறித்த முக்கிய அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

குறித்த அறிவிப்பில்" அணுசக்தி ஒப்பந்தத்தில் மீண்டும் இணைந்து. ஈரானுடன் பேச்சுவார்த்தை நடத்த ஜனாதபதி ஜோ பைடன் தயாராக இருப்பதாகவும். அணுசக்தி ஒப்பந்தத்தில் பல்வேறு நிபந்தனைகளிலிருந்து ஈரான் வெகுதொலைவிலுள்ளதாகக் கூறினார். கடந்த 2018ஆம் ஆண்டில் ஜனாதிபதியா இருந்த டொனால்ட் ட்ரம்ப். அணுசக்தி ஒப்பந்தத்திலிருந்து விலகிய துடன். ஈரான் மீது பொருளாதார தடையும் விதித்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.



# மூன்று மாதம் பகல்... மூன்று மாதம் இரவு: அதிசயிக்க வைக்கும் விநோதத் தீவு!




நோர்வே நாட்டில் உள்ள ஒரு தீவில் கடந்த ஒரு மாதமாக பகல் பொழுது மட்டுமே நிலவி வருகிறது. வடக்கு நோர்வே பகுதியில் உள்ளது மேற்கு ட்ரோம்சோ தீவு. இந்தத் தீவு ஆர்டிக் வட்டத்தின் வடக்குப் பகுதியில் அமைந்துள்ளது. இதனால் கடந்த மே 18 ஆம் திகதி முதல் இந்தத் தீவில் மட்டும் சூரியன் மறையவே இல்லை.

சூரியன் மறையாத இந்தத் தீவை அப்பகுதி மக்கள் 'கோடைத்தீவு' என்றே அழைக்கின்றனர். இந்தப் பகல் காலம் ஜூலை 26 ஆம் திகதி வரை நீடிக்கும் அறிவியல் ஆய்வாளர்கள். இதேபோல், இந்தத் தீவில் நவம்பர் மாதம் முதல் ஜனவரி மாதம் வரையிலான காலக்கட்டத்தில் சூரியனே உதிக்காதாம். சூரியன் உதிக்காத மூன்று மாத காலத்தை 'நீண்ட போலார் இரவுகள்' என்று அழைக்கின்றனர் நோர்வே மக்கள்.

இந்தத் தீவில் சுமார் 300 மக்கள் வசிக்கின்றனர். நீண்ட பகல், நீண்ட இரவு கொண்ட இந்தத் தீவை 'கால நேரம் அற்ற தீவு' என்று அரசு அறிவிக்க வேண்டும் என இப்பகுதி மக்கள் கையெழுத்து கோரிக்கை வைத்துள்ளனர். இதன் மூலம் இம்மக்களுக்கு பாடசாலை, கல்லூரி, அலுவலக நேர விதிமுறைகளில் தளர்வு கிடைக்கும். இதனாலே நோர்வே நாடாளுமன்றத்துக்கு இந்தக் கோரிக்கையை கொண்டு செல்கின்றனர் அந்தத் தீவின் மக்கள்.

# விண்வெளியில் சுடப்பட்ட முதல் பலகாரங்கள்



பாட்டி நிலவில் வடை சுடுகிறார் என்று கூறுவதைக் கட்டுக்கதை என்று ஒதுக்கினோம். ஆனால் அது உண்மையாகும் காலம் வெகு தொலைவில் இல்லை. அனைத்துலக விண்வெளி ஆய்வு நிலையத்தில் முதல்முறையாகப் பலகாரங்களைச் சுட்டெடுத்துள்ளனர் விண்வெளி வீரர்கள் சிலர்.

Cookies எனப்படும் பலகாரங்களைச் சுட்டெடுக்கச் சுமார் மூன்று மணிநேரம் எடுத்தது. சராசரியாகப் பூமியில் அதைச் சுட 20 நிமிடங்களே எடுக்கும். பலகாரங்களைச் சுட்ட அடுப்பு, புவியீர்ப்பு சக்தி இல்லாத இடத்தில் இயங்க வடிவமைக்கப்பட்டது.

பலகாரங்களைச் சுடும் போது அவைப் பார்க்க அழகாக, மணமாக இருந்தன என்றனர் சோதனையில் ஈடுபட்ட விண்வெளி வீரர்கள். ஆனால் அவற்றைச் சாப்பிட்டுப் பார்க்கும் வாய்ப்புக் கிட்டவில்லை அவர்களுக்கு.

விண்வெளியில் சுடப்பட்ட பலகாரங்கள் SpaceX விண்கலம் மூலமாகப் பூமிக்கு அனுப்பிவைக்கப்படுகின்றன. அவை உண்பதற்கு உகந்தவையா என்று முதலில் சோதிக்கப்படும். விண்வெளிப் பயணத்தை மேலும் சௌகர்யமானதாக மாற்றியமைக்க புதுவித அடுப்புகளைப் போன்ற கண்டுபிடிப்புகள் உதவும் என்று நம்பப்படுகிறது.

# முகத்துக்கு பூசும் பவுடரை விரும்பி உண்ணும் வினோதப் பெண்



இங்கிலாந்து நாட்டின் டெவோன் நகரைச் சேர்ந்தவர் லிசா ஆண்டர்சன் (வயது 44). 5 குழந்தைகளுக்கு தாயான இவர், ஒரு வினோத பழக்கத்துக்கு அடிமையாகி உள்ளார். அதற்கமைய இவர் கடந்த 15 ஆண்டுகளாக முகத்துக்கு பூசும் பவுடரை அதிகமாக உட்கொண்டு வருகிறார். இதற்காக அவர் இதுவரை 8,000 பவுண் தொகையை செலவிட்டுள்ளார். லிசா ஆண்டர்சனுக்கு 5ஆவது குழந்தை பிறந்த பின்னரே அவருக்கு பவுடரை சாப்பிடும் பழக்கம் ஏற்பட்டுள்ளது. அதிலும் குறிப்பாக குழந்தைகளுக்காக பயன்படுத்தப்படும் ஜான்சன் எண்ட் ஜான்சன் பவுடரை அவர் விரும்பி சாப்பிடுகிறார். இந்த பழக்கம் தொடங்கிய புதிதில் யாருக்கும் தெரியாமல் குளியலறைக்குள் சென்று இரகசியமாகவே பவுடரை சாப்பிட்டு வந்துள்ளார். சில ஆண்டுகளுக்கு முன்னர்தான் லிசா குடும்பத்தினருக்கே இந்த விவகாரம் தெரிய வந்துள்ளது.

ஆனால் போதைக்கு அடிமையானது போல், பவுடருக்கு அடிமையான அவரை அதில் இருந்து மீட்க தெரியாமல் அவரின் குடும்பத்தினர் தவிக்கின்றனர். மருத்துவர்களின் உதவியை நாடியபோது இரும்பு சத்து குறைபாடு மற்றும் வேறு சில நோய் அறிகுறியால் இந்த நிலை ஏற்பட்டிருக்கும் என்று கூறுகின்றனர். பவுடரை அளவுக்கு அதிகமாக சுவாசித்தாலோ, உண்டாலோ உடம்பிற்கு கெடுதல். புற்று நோய்கூட வர வாய்ப்புண்டு. ஆனால் லிசாவுக்கு இதுவரை எந்த பாதிப்பும் ஏற்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இப்பத்திரிகை இலக்கம் 154A, தேக்கவத்தையில் அமைந்துள்ள தென்றல் அச்சகத்தில் அச்சிட்டு, தினப்புயல் நிறுவனத்தால் 31.01.2021 அன்று வெளியிடப்பட்டது.